விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 13 வெள்ளிக்கிழமை (26.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 097

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com

## யாழில் ஒரே நாளில் 79 பேருக்கு கொரோனா

### 66 பேர் யாழ்.மாநகர சந்தை தொகுதியுடன் தொடர்புபட்டவர்கள்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் ஒரே நாளில் 79 பேருக்கு கொரோனா தொற்று 19

## 54 இந்திய மீனவர்கள் ஒரே நாளில் கைது

### ஐ.நாவில் இந்தியா நடுநிலைமை வகித்ததன் எதிரொலி என குற்றச்சாட்டு

(கொழும்பு)
எல்லைதாண்டி மீன் பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 54 இந்திய மீனவர்களை கடற்படை ஒரே நாளில் கைது செய்துள்ளது. 19

## ஏப்ரல் 9 1ஆம் தவணை பாடசாலை விடுமுறை

(கொழும்பு)
இலங்கையில் 2021ஆம் கல்வி 19

# யாழில் வீரியத்துடன் பரவும் கொரோனா

## யாழ்.நகரின் மையப் பகுதி முடக்கம்

- பொது நிகழ்வுகளுக்குத் தடை
- மண்டபங்களில் திருமண நிகழ்வுகள், ஏனைய நிகழ்வுகள், கூட்டங்கள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம்.
- மரணச் சடங்குக்கு 25 பேர் மாத்திரம் அனுமதி.
- தனியார் வகுப்புகள் நடத்தத் தடை.



யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிக அளவில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தின் நகரை அண்மித்த முக்கிய பகுதிகள் முடக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
நேற்றுக் 19

## கொரோனா நாட்டில் மேலும் மூவர் பலி

(கொழும்பு)
இலங்கையில் நேற்று மேலும் மூவர் கொரோனா வைரஸால் பலியாகி உள்ளனர். 19

## கிளிநொச்சி கொரோனா சிகிச்சை நிலையத்தில் முதல்வர் மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாநகர முதல்வர், சட்டத்தரணி வி. மணிவண்ணன் கிளிநொச்சி கிருஷ்ணபுரம் கோவிட்-19 சிகிச்சை நிலையத்தில் தங்கவைக்கப்பட்டு கண்காணிப்படுகிறார்.
அவருடன் 110 பேர் 19

## சர்வதேச நாடுகள் இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும்

### சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

(கொழும்பு)
சர்வதேச அளவிலான விதி மீறல்களுடன் தொடர்புடைய இலங்கை மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க ஐ.நா. உறுப்பு நாடுகள் முன்வரவேண்டும் என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.
அத்துடன், தேசிய நீதிமன்றங்கள் ஊடாக சர்வதேச குற்றங்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுப்பதை உறுப்பு நாடுகள் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமென 19

## புதிய கொரோனா கொத்தணி முடக்கப்படுமா யாழ்.குடாநாடு?

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் புதிய கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில் யாழ்ப்பாணத்தை முடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
யாழ்ப்பாண மாநகர சந்தை தொகுதி மற்றும் திருநெல்வேலி சந்தையில் நடத்தப்பட்ட எழுமாற்று பி.சி.ஆர் பரிசோதனையில் பல கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
மேலும் பல பாட 19

## அதிகரிக்கும் கொரோனா வடக்கு உயர் அதிகாரிகள் பலர் தனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களை நவீனமயப்படுத்தல் தொடர்பிலான இரண்டு நாள் ஆய்வரங்கில் பங்குகொண்ட வடக்கு மாகாணத்தின் அதி உயர் பதவிகளில் 19

## ஐ.நா தீர்மானம் சட்டவிரோதமானது

### பாராளுமன்றில் இலங்கை உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

(கொழும்பு)
ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப் 19

## திருநெல்வேலியில் காவலாளி சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
வீட்டின் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த காவலாளி ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
திருநெல்வேலி 19

## எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் மாகாண சபைத் தேர்தல்?

### விரைவில் அமைச்சரவைப் பத்திரம்

(கொழும்பு)
மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவதற்குத் தேவையான சட்டத்திருத்தம் அடங்கிய பிரேரணை இன்னும் இரு வாரங்களில் அமைச்சரவையில் முன் வைக்கப்படவுள்ளது 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## குமரேசு பொன்னுத்துரை

(ஓய்வுபெற்ற ஆசிரியர் – யாழ்ப்பாணக் கல்லூரி)

சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமரேசு பொன்னுத்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி) நேற்று (25.03.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமரேசு - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் தருமலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பத்மலோஜினியின் அன்புக் கணவரும் அருள்மொழி (ஆசிரியை - புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), சுதாகரன் (ஆசிரியர் - மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை), காலஞ்சென்ற கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறிக்காந்தன் (தி/ கந்தளாய் பேராறு பரமேஸ்வரா ம.வி.) , சியாமளா ஆகியோரின் அன்பு மாமனும் பிரவிநாத், தமிழினி, தரணியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற மயில்வாகனம், சரஸ்வதி, நமசிவாயம், இராசமணி மற்றும் ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பலட்சுமி மற்றும் சற்குணம், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.03.2021) பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-1814)

பத்திரகாளி கோவிலடி, சுழிபுரம். 077 241 7067 தகவல்:- பொ. சுதாகரன் (மகன்)

# மரண அறிவித்தல்

## திருமதி மயில்வாகனம் பத்மாவதி (லட்சுமி)

தோற்றம் : 06.03.1934
மறைவு : 25.03.2021



துன்னாலை வடக்கு, வல்லியானந்தம் வீதியினை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பத்மாவதி (லட்சுமி) நேற்று (25.03.2021) வியாழக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - நாகமுத்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம் - நாகம்மா தம்பதியினரின் மூத்த மருமகளும் காலஞ்சென்ற மயில் வாகனத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தெட்சணாமூர்த்தி, ஈஸ்வரி, சிவநேசன், வல்லிபுரநாதன் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி, செல்வரத்தினம் மற்றும் சிதம்பரப்பிள்ளை, காலஞ்சென்ற தங்கவடிவேல் மற்றும் அருமைதுரை (UK) ஆகியோரின் மைத்துனியும் தேவரத்தினம், செல்வராணி (ஓய்வுநிலை ஆசிரியை), புஸ்பராணி (நெதர் லாந்து), தவராஜா (தபாலகம் - ஓமந்தை), சிவராசா, மோகநாதன் (ஆசி ரியர் - இராமகிருஷ்ண வித்தியாலயம், வெள்ளவத்தை), சிவலோகநாதன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - நகரசபை, வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசதுரை, சிவயோகநாதன் (பலநோக்கு கூட்டுறவு சங்கம், கொடிகாமம்), சின்னையா (நெதர்லாந்து), சுவேந்திரா (தாதியர் - ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை), ராஜினி, ரேவதி (வர்த்தக திணைக்களம் - கொழும்பு), சித்திராதேவி அவர்களின் பாசமிகு மாமியும் வாசினி (போசனையாளர் - யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), கல்யாணி (ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் - போதனா வைத்திய சாலை யாழ்ப்பாணம்), ஷைலாஜினி, ஆர்த்திகன், ஹருணி, ராகவி, சாமிலிக்கா, துளசிகா, கிருஷிகன், அக்ஷயன், காலஞ்சென்ற கேசிகன், சிவலோஜினி, சிவசாலினி, விதுசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கனிந்திகை, திசன், ஆதிரா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.03.2021) வெள்ளிக் கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 10.00 மணியளவில் தியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-1813)

வல்லியானந்தம் வீதி, துன்னாலை வடக்கு, கரவெட்டி. 021 226 2681 தகவல்:- குடும்பத்தினர்

# அரிசி விலைகளில் திடீர் மாற்றம்

(கொழும்பு)

அரிசி விலைகளில் திடீர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி நாடு அரிசி ஒரு கிலோ 97 ரூபாவுக்கும், வெள்ளை மற்றும் சிவப்பு அரிசி ஒரு கிலோ 95 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுமென விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து குறித்த விலை அமுல்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ச.தொ.ச. மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மற்றும் சுப்பர் மார்க்கெட்டுகளில் மேற்படி விலைகளில் அரிசியை கொள்வனவு செய்யமுடியுமென விவசாய அமைச்சு அறிவித்துள்ளது. (ம-03)

# துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர் திருமதி உருத்திரா பகீரதன் அவர்களின் அன்புச் சகோதரனும் முன்னாள் உப அதிபர் திரு. பரமநாதன் அவர்களின் அன்பு மகனும் ஆகிய

அமரர் **பரமநாதன் சுரேசன்**

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து நாமும் துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-1810)

ஆசிரியர் கழகம்
யா / யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.

# மரண அறிவித்தல்

## சண்முகம் சிவலிங்கம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சிவலிங்கம் கடந்த 21.03.2021 (ஞாயிற்றுக்கிழமை) ஜேர் மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் சிறிஸ்காந்த றேவதியின் அன்புக் கணவரும் கீர்த்தீபனின் பாச மிகு தந்தையும் காலஞ்சென்ற அரிய நாயகம் - முத்தரசி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரராய சிங்கம், சகுந்தலாதேவி, காலஞ்சென்ற பாஸ்கரலிங்கம், கருணாகரன் (jp), நிர்மலாதேவி ஆகியோரின் சகோதரனும் சிறிஸ்காந்தலோஜினி, சிறிவனஜா, ஸ்ரீமங்களராஜா (அப்பன்), ஸ்ரீபவள ராஜா, ஸ்ரீதரன், ஸ்ரீபிரபு, ஜெயந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (25.03.2021) வியாழக்கிழமை இலங்கை நேரப்படி மாலை 5.00 மணியளவில் ஜேர்மனி பூர்பன்டலில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தெல்லிப்பளை (6335) தகவல்:- ஸ்ரீதரன் ( மைத்துனர் )

# கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக்கழக நண்பன் **திரு. மயில்வாகனம் மோகன்** அவர்களின் அன்புத் தாயார்.

அமரர் திருமதி **பத்மாவதி மயில்வாகனம்**

மண்ணில் 06.03.1934 விண்ணில் 25.03.2021

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-1812) 89 / 90, யாழ். பல்கலைக்கழக கலைப்பீட நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டும் 60 வது பிறந்தநாள் வாழ்த்தும்



## திரு.க.மயில்வாகனம்

(SLTS 2-II- பயிற்றப்பட்ட உடற்கல்வி ஆசிரியர்)

(விளையாட்டுத்துறை செயலாளர்)

### சேவைக்கால பதிவுகள்

யா/மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை 01.01.1993-31.12.1995 [தொண்டர் ஆசிரியர்]
மு/நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை 01.01.1996 -31.12.1999 [தொண்டர் ஆசிரியர்]
யா/மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை 01.01.2000-11.11.2009 [தொண்டர் ஆசிரியர்]
யா/மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை 12.11.2009-13.05.2012 [உடற்கல்வி ஆசிரிய உதவியாளர்]
கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை 14.05.2012-13.05.2014 [பயிற்சி ஆசிரியர்]
யா/மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை 14.05.2014-25.03.2021
[ஆசிரியர், தரம் 6,7,8 பகுதித்தலைவர், விளையாட்டுத்துறை முதல்வர்]

### சிறந்த சேவையாளன்

1993 இல் விளையாட்டுத்துறை தொண்டர் ஆசிரியராக மகாஜனாவுடன் இணைந்துகொண்ட திரு.க.மயில்வாகனம் அவர்கள் 25.03.2021 நேற்றுடன் ஓய்வு பெற்று இன்று 60வது பிறந்தநாளை நிறைவு செய்கின்றார். முன்னாள் அதிபர் அமரர் திரு.க.நாகராஜா அவர்களது காலத்தில் மகாஜனாக் கல்லூரியின் சகலதுறை விளையாட்டு வீரனும் பயிற்றுநருமான அமரர் திரு.இ.றொகான் இராஜசிங்கம் அவர்களால் அழைத்துவரப்பட்டார். பல இடப்பெயர்வுகளை சந்தித்தும் மகாஜனாவின் விளையாட்டுத்துறை தொய்வின்றி வெற்றிநடை போடுவதற்கு திரு.இ.றொகான் இராஜசிங்கம் அவர்களின் தூரநோக்கு சிந்தனையே காரணமாயிற்று.

மகாஜனாவின் நூலகராக கடமையாற்றியதோடு. விளையாட்டுத்துறை பயிற்றுநராக - குறிப்பாக உதைபந்தாட்ட பயிற்றுநர் சிகரமாக விளங்கிய அமரர் திரு.T.P.பத்மநாதன் அவர்கள் மீதும் அமரர் திரு.இ.றொகான் இராஜசிங்கம் அவர்கள் மீதும் கொண்ட "குரு விசுவாசம்" காரணமாக திரு.க.மயில்வாகனம் அவர்கள் மகாஜனாவின் பக்கம் ஈர்க்கப்பட்டார். காரணம் யாதெனில் இவர் கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பில் மெய்வல்லுநர் எறிதல் நிகழ்ச்சிகளில் (குண்டு.தட்டு.ஈட்டி) பங்குபற்றிய போது அமரர்கள் பத்மநாதன், றொகான் ஆகியோர் பயிற்றுநராக வழிப்படுத்தினர். மேலும் மகாஜனாவின் உதைபந்தாட்டமும் இவரை ஈர்த்துக்கொண்டது.

திரு. க. மயில்வாகனம் அவர்கள் பாடசாலையால் வழங்கப்பட்ட சொற்ப ஊதியத்துடன் மகாஜனா விசுவாசத்துடன்,அர்ப்பணிப்புடன் கடமையாற்றினார். இனுவில் மத்திய கல்லூரியில் இயங்கிய காலத்தில் இனுவில் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக 1993 இல் விளையாட்டு மைதானம் அமைத்தும் 1994 இல் மருதனார்மடத்தில் கொட்டகை அமைத்தும் மகாஜனா தனித்துவமாக இயங்கிய காலத்தில் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு திரு.க.மயில்வாகனம் அவர்கள் உந்துசக்தியாக விளங்கினார்.

மகாஜனாவின் ஓய்வுபெற்ற ஆசிரியர் மகாஜனன் திரு.செல்வராஜா அவர்கள் விளையாட்டுத்துறை முதல்வராக கடமையாற்றிய இக்காலப் பகுதியில் திரு.இ.றொகான் இராஜசிங்கம் அவர்களுடன் மெய்வல்லுநர் துறைக்கு பக்கபலமாக இருந்தார். குறிப்பாக எறிதல் நிகழ்ச்சியில் மகாஜனா வீரர்கள் பலரை உருவாக்கி வெற்றிவாகை சூடினார். அத்தோடு உதைபந்தாட்ட அணிகளை ஒழுங்கமைப்பதிலும் பயிற்றுநர்களுடன் இணைந்து ஆலோசனைகள் வழங்கி பயிற்சியளிப்பதிலும் மிகத்தீவிரமாக செயற்பட்டார். இக்காலப்பகுதியில் கிரிக்கெட் அணிகளை மீண்டும் ஆரம்பித்து அத்துறை வளர்ச்சியடைவதற்கு பல வழிகளில் உதவினார். நாட்டின் அசாதாரண சூழ்நிலையான இக்காலப்பகுதியில் போக்குவரத்து வசதிகள் குறைந்த நிலையில் மாணவர்களுடன் மாணவனாகவும் வீரர்களுடன் வீரனாகவும் சேர்ந்தியங்கி துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்து போட்டிகளில் பங்குபற்றிய தருணங்கள் இன்றும் இனிமையானவை.

1995 இல் யாழ்ப்பாணத்தின் மாபெரும் இடப்பெயர்வின் போது வன்னி மாநிலத்திற்கு இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. 1999 இறுதியில் அம்பனையில் மீண்டும் மாகாஜனாவுடன் சங்கமித்தார். அன்று தொடக்கம் இன்று வரை ஓயாது பற்றுடன் சேவையாற்றிக் கொண்டிருக்கிறார். 2009 இல் உடற்கல்வி ஆசிரியராக நிரந்தர அரச நியமனம் கிடைத்தது.

தோல்விகளை கண்டு துவளாத திரு. க.மயில்வாகனம் அவர்கள் மகாஜனாவிற்காக வெற்றிக்கனிகளை பறிப்பதற்கு ஓயாது உழைத்தார். 2001 இல் இவர் உடற்கல்வி ஆசிரியராக இருந்து ஒத்துழைப்பு வழங்க திரு.செ.ரமணன் அவர்களின் பயிற்றுவிப்பில் 19 வயது ஆண்கள் கரப்பந்தாட்ட அணி வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்தில் சம்பியனாகியது.இதே காலத்தில் விளையாட்டுத்துறை முதல்வர் திரு.செல்வராஜா அவர்களுடன் இணைந்து வரலாற்றுச் சிறப்புமிக்க மகாஜனா - ஸ்கந்தா மோதும் "வீரர்களின் போர்" துடுப்பாட்ட போட்டியை ஆரம்பிக்க உந்துசக்தியாக விளங்கினார். இவரது வழிகாட்டலிலேயே மகாஜனாவின் வீரர்களின் போர் முதலாவது துடுப்பாட்ட அணி களம்கண்டது.

2008 இல் 21 வயது ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் பார்த்தீபன் (தற்போது கொழும்பு சேனநாயக்கா கல்லூரி உடற்கல்வி ஆசிரியர்) என்ற மாணவன் மூலம் நீண்டகாலத்திற்கு பின்னர் தேசியமட்டத்தில் வெள்ளிப்பதக்கத்தை பெற்றுக்கொடுத்தார். மேலும் இவரால் 12 வயதில் உருவாக்கப்பட்ட உதைபந்தாட்ட ஆண்கள் அணி 19 வயதில் 2008 இல் 22 வருடங்களின் பின்னர் மாவட்ட சம்பியனாகியது். இவர் விளையாட்டுத்துறை முதல்வராக இருக்கின்ற காலப்பகுதியில் (2017 இற்கு பின்னர்) மகாஜனா மெய்வல்லுநர் போட்டிகளிலும் உதைபந்தாட்ட போட்டிகளிலும் தேசியமட்ட வெற்றிகள் பலவற்றை சுவைத்துக்கொண்டிருக்கின்றது. குறிப்பாக 2018 இல் 20 வயது ஆண்கள் உதைபந்தாட்ட அணியும் 2019 இல் 20 வயது பெண்கள் உதைபந்தாட்ட அணியும் கல்வி அமைச்சால் நடாத்தப்பட்ட போட்டியில் தேசியமட்டத்தில் சம்பியனாகி வரலாறு படைத்தன. தனது சேவைக்காலத்தில் விளையாட்டுத்துறையின் மூலம் உடற்கல்வி ஆசிரியர்கள் பலரையும் விளையாட்டுத்துறைப் பயிற்றுநர்கள் பலரையும் உருவாக்கியுள்ளார் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவரான திரு.க.மயில்வாகனம் அவர்கள் தான் கடமையாற்றிய மகாஜனாக் கல்லூரி மீது மகாஜனன்களை விட அதிக பற்றும் விசுவாசமும் மிக்கவர். தனது குடும்ப பொருளாதார வசதிகளை நோக்காது விளையாட்டு மீதும் மகாஜனா மீதும் காதல் கொண்டு தன்னை மறந்தும் ஒறுத்தும் உழைத்தவர்.

தனது சேவைக்காலத்தில் விளையாட்டுத்துறை பயிற்சியாளராக, உடற்கல்வி ஆசிரியராக, தரம் 6.7.8 பகுதித்தலைவராக, விளையாட்டுத் துறை முதல்வராக பல்வேறு பரிமாணங்களில் அயராது உழைத்த திரு. க. மயில்வாகனம் அவர்கள் 25.03.2021 உடன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார். அவரது ஓய்வுக்காலம் சீரும்சிறப்புமாக அமைய 60 ஆவது பிறந்தநாளில் மகாஜனா சமூகமாக ஒன்றிணைந்து வாழ்த்துக்கின்றோம்.

**கல்லூரிச் சமூகம், யா/மகாஜனாக்கல்லூரி, தெல்லிப்பழை.**

(C-1802)

# ஜெனிவாத் தீர்மானம் கோட்டா அரசிற்கானதல்ல; 30 வருட போரை முடித்த இராணுவத்தினருக்கானதே -என்கிறார் டிலான் பெரேரா-

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராக ஜெனிவா தீர்மானம் கொண்டுவரப்படவில்லை என ஆளுங் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானத்தை அரசின் தோல்வி என எதிர்த்தரப்பினர் குறிப்பிடுகின்றனர்.

இந்தத் தீர்மானம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டதல்ல. மாறாக 30 வருடகால போரை நிறைவுக்குக்கொண்டு வந்த இராணுவத்தினருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டது என்பதை எதிர்த்தரப்பினர் தெரிந்துகொள்ள வேண் டும்.

இறுதிக்கட்டப்போரில்மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன என்று குறிப்பிடப்படும் குற்றச்சாட்டுக்கள் ஏதும் இதுவரையில் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை.

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஜெனிவாவில் இலங்கை விவகாரம் ஒவ்வொரு வருடமும் பேசப்படுகின்றது. இதனால் சாதாரண தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப்பெறாது.

தமிழ் மக்களின் உரிமைகளை இராணுவத்தினர் பறித்தார்கள் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ் இளைஞர், யுவதிகளை விடுதலைப் புலிகள் அமைப்பினர் பலவந்தமாகப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டார்கள். சிறுவர்கள்கூட பலவந்தமான முறையில் போராளிகளாக்கப்பட்டார்கள். இதனை மனித உரிமை மீறலாக ஏன் சர்வதேசம் கருதவில்லை?

இலங்கையின் மனித உரிமைகளை விமர்சிக்கும் நாடுகளின் மனித உரிமைகள் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளன. அமெரிக்காவின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உலகமும் நன்கு அறிந்துள்ளது.

இவ்வாறான நிலையில் இவர்கள் இலங்கைக்கு எதிராகச் செயற்படுகின்றமை குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை என்பதை வெளிப்படைத் தன்மையுடன் அறிந்துகொள்ளலாம்.

ஜெனிவாவில் நிறை வேற்றப்பட்டுள்ள தீர்மானத்தால் இலங்கைக்கும், அரசுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. இராணுவத்தினரையும் நாட்டின் சுயாதீனத்தன்மையையும் எந்தக் காரணிகளைக் கொண்டும் விட்டுக் கொடுக்க மாட் டோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.**

**வணிகத்தில் முதலாம் தேர்வு (வெளிவாரி) முதலாம் அரையாண்டுப் பரீட்சை -2018**

**வணிகத்தில் மூன்றாம் தேர்வு (வெளிவாரி) இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை -2017**

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியான மாணவர்கள் பரீட்சைக்கான விண்ணப்ப படிவத்தினை 26.03.2021 ஆம் திகதியிலிருந்து 07.04.2021 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் (காலை 8.30 மணி-மாலை 4.15 மணிவரை) திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அல்லது www.codl.Jfn.ac.lk என்ற இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் பரீட்சை அனுமதி அட்டை விநியோகம், பரீட்சை நேர அட்டவணை தொடர்பான விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

பதிவாளர்

(C-1804)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியை முன்னிட்டு ஒலிம்பிக் தீபத்தின் தொடர் ஓட்ட நிகழ்ச்சி ஜப்பானின் வடகிழக்கு நகரமான புகுஷிமாவில் உள்ள ஜே-விலேஜ் விளையாட்டு வளாகத்தில் நேற்று ஆரம்பமானது.

# சென்னை சுப்பர் கிங்ஸ் இம்முறை புதிய சீருடையில்




எதிர்வரும் 9 ஆம் திகதி தொடங்கும் 14 ஆவது ஐ.பி. எல்.கிரிக்கெட் போட்டிக்குத் தயாராகி வரும் முன்னாள் சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இந்தமுறை புதிய சீருடையுடன் களம் இறங்கவு ள்ளது.

2008 ஆம் ஆண்டில் இரு ந்து ஒரே மாதிரியான சீருடை யுடன் வலம் வந்த சென்னை அணி முதல் முறையாக அதன் வடிவமைப்பில் மாற்றம் செய்து ள்ளது.

தேசத்தைப் பாதுகாக்கும் இராணுவப் படையினரைக் கௌரவிக்கும் வகையில் இராணுவச் சீருடைக்குரிய நிறம், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சீருடையின் தோள்பட்டைப் பகுதியில் இடம்பெற்றுள் ளது.

இது குறித்து சென்னை அணி யின் தலைமை செயல் அதிகாரி காசி விஸ்வ நாதன் கூறுகையில்,

இராணுவத்தின் முக்கியத் துவத்தை யும் அவர்களின் தன் னலமற்ற சேவை யைப் பாரா ட்டும் விதமாகவும் அது குறித்து விழிப்புணர்வை அதி கப்படுத்தும் நோக்கிலும் எங்கள் அணியின் சீருடையில் இராணுவ சீருடையின் வண ணத்தை இணைத்துள் ளோம்.

இராணுவ வீரர்கள் தான் நாட்டின் உண்மை யான ஹீரோக்கள்" என்றார். (4)

# இந்தியாவுக்கு மேலும் தங்கம்

உலகக கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி டில்லியில் நடை பெற்று வருகிறது. இதில் 53 நாடு களைச் சேர்ந்த 294 வீர - வீராங் கனைகள் பங் கேற்று ள்ளனர்.

நேற்று முன் தினப் போட்டி முடி வில் இந்தியா 7 தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலம் என ஆக மொத்தம் 15 பதக்கங்க ளுடன் முதல் இடத்தில் இருந் தது.

நேற்றுக் காலை இந்தியா வுக்கு மேலும் ஒரு தங்கப் பதக்கம் கிடைத் தது. (4)


## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் முன்னைநாள் செயலாளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் பதவிகளை வகித்தவரும் தற்போது எமது சங்கத்தின் அங்கத்தவரும் முன்னாள் பிரதி மாகாண ஆணையாளர், சுதேச மருத்துவத் திணைக்களம், வடமாகாணம், தற்போது மூலிகைத் தோட்டம், திருநெல்வேலி மருத்துவப் பொறுப்பதிகாரியுமான

அமரர் Dr. பரமநாதன் சுரேசன்

அவர்களின் பிரிவுத் துயரில் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(6339)

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம்


# கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

கொடிகாமம் - மந்துவில் கிழக்கு தென்னவன் கலா மன்றம் சோல்வே நிறுவனத் தின் அனுசரணையுடன் நடத் தும் வடமாகாண ரீதியிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் ஏப்ரல் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

குறித்த போட்டியில் பங்கு பற்ற விரும் பும் விளையாட்டுக் கழகங்கள் ஏப்ரல் 5 ஆம் திகதிக்கு முன்னர் 077 776 8148 எனும் தொலைபேசி இலக்கத்துடன்தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடி யும் எனப் போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த போட்டியில் வெற்றி பெற்று முதல் 3 இடங்களைப் பெறும் அணிகளுக் குப் பணப் பரிசிலும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படும். (4-30)

# மரண அறிவித்தல்



வெடியரசன் வீதி,
காரைநகர்.

## சபாபதிப்பிள்ளை சதாசிவம்

காரைநகர், வெடியரசன் வீதியை பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை சதாசிவம் நேற்று (25.03.2021) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகமலரின் (இந்திராணி) அருமைக் கணவரும் காலஞ் சென்ற ஐயாத்துரை - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சதானந்தம், அருளானந்தம், அன்பரசி, தமிழழகன், தமிழழகி, கருணாகரன், பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், கனகம்மா, லக்சுமி, குணவதி, துரைச்சாமி, சந்திரமதி ஆகி யோரின் அன்புச் சகோதரனும் சிவனேஸ்வரி, கௌரி, கலா நாதன் (கேசவன்), துரைநேசன், சுகந்தி, சிந்து, லகி ஆகி யோரின் அன்பு மாமனாரும் வினுதன், மிதுலன், அபிராம், ஜனனன், ஆதித்தியன், சுப்ராயா, கபிலன், தினேஷ், சபேஷ், சர்பிகா, ஜனுசன், தருண், வருண், திவ்யா, நிருஷன், அஸ்வின், அருண், அகிலன், ஜெபிரா, சாதனா, சயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.03.2021) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயா னத்துக்கு காலை 11 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்:- பிள்ளைகள், மருமக்கள், வில்லியம்துரை, செல்வரத்தினம்

(6346)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## பூநகரிப் பிரதேசசபை

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை

1.இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினது மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் ஒருபகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் உள்ளவாறான வேலைத்திட்டங்களின் கொடுப்பனவுக்கு பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2.தவிசாளர்.உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு.பூநகரி பிரதேசசபை தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரசுக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

3.தேசிய போட்டிகேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுவதுடன் பிராந்திய முன்னுரிமை மற்றும் **CIDA** தர முன்னுரிமை என்பன பொது நிதி சுற்றறிக்கைக்கு அமைவாக பின்பற்றப்படும்.

4.கேள்விபெற தகுதியுடையவராவதற்கு. வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் **(Black List)** சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும். அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமான. அமைப்புக்கான **CIDA** பதிவுமேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

5.தேவையான தகைமைகள். கேள்விஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை **(Schedule)** பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது

6.ஆர்வமுள்ளகேள்விதாரர்கள் தலைவர். பெறுகைக்குழு. பூநகரி பிரதேச சபை.பூநகரி (தொலைபேசி: 021 206 0855. 021 228 4572). **Email poonakaryps@yahoo.com** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக வேலை நாட்களில் 26.03.2021ஆம் திகதியிலிருந்து 09.04.2021 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணிமுதல் பி.ப 15.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

7.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர். பெறுகைக்குழு. பூநகரி பிரதேச சபை. பூநகரி அவர்களிடமிருந்து 26.03.2021 ஆம்திகதியிலிருந்து 09.04.2021ஆம் திகதி வரைமு.ப 09.00 மணிக்கும் பி.ப15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 **(VAT நீங்கலாக)** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

8.கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர்.பெறுகைக்குழு. பூநகரி பிரதேச சபை. பூநகரி எனும் முகவரிக்கு 09.04.2021ஆம் திகதிபி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

9.கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்விஎண் | வேலைவிபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டு தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைவைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| **NP/KI/POPS/PSDG /2021/01** | Renovation of Iranaimathanagar Ayurvedic Hospital. | PSDG | 1.36 | 03 மாதம் | C8 &C9 | 14,000.00 | 25.06.2021 |
| **NP/KI/POPS/PSDG /2021/03** | Construction of Sepasthiyarpuram Road | PSDG | 5.53 | 03 மாதம் | C7 &C6 (வீதி) | 56,000.00 | 23.07.2021 |

10.கேள்விகோரல் பற்றிய முன்னோடிக்கூட்டம் 02.04.2021ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு பூநகரி பிரதேச சபைக்கட்டடத்தில் நடைபெறும். ஆர்வமுள்ளகேள்விதாரர்கள் தமது சொந்தசெலவில் கலந்துகொள்ளமுடியும்.

அருணாசலம் ஐயம்பிள்ளை, தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பூநகரி பிரதேச சபை.
26.03.2021

(C-1806)



# பதினாறாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## கதிர்காமு சந்திரலிங்கம்

வாழ்ந்த காலத்தில் அன்பை எமக்கு
அள்ளிவழங்கிய எம் அன்புத் தந்தையே
உங்களை இழந்து பதினாறு ஆண்டுகள்
நாம் படும் துன்பம் சொல்லி மாளாதையா?
வாழ்வில் எமை வழிப்படுத்தி
வாழ்வை எமக்கு வளப்படுத்தி
இறையடி சேர்ந்தீரோ!
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி உருகுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம்
05.03.1952

மறைவு
26.03.2005

மயூரன்ஸ் ஜுவல்லர்ஸ்
95, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்...
குடும்பத்தினர்

எஸ்.எஸ்.மொபைல்ஸ்
(சந்திரலிங்கம் சறோஜினிதேவி)
65, சத்திரசந்தி, யாழ்ப்பாணம்.

(C-1803)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி மக்கள் நலன் பேணும் கூட்டுறவுக் கழகம் கைதடி நாவற்குழி பிரதேசத்தில் புலமைப்பரிசில் சித்தியெய்திய மாணவர்களுக்கும் பல்கலைக்கழகம் கல்வியியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கும் மாணவர்களுக்கும் பட்டப்படிப்பை முடித்து வெளியேறிய பட்டதாரிகளுக்கும் பாராட்டுவிழா நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் க.சிறிதரன் தலைமையில் நாளை மறுதினம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கைதடி விநாயகர் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன் கலந்து கொள்வார்.

ஐரோப்பிய நாட்டில் வாழும் உறவுகள் இந்நிகழ்விற்கான நிதிப்பங்களிப்பை வழங்கியுள்ளனர். (5-4)

# பொதுச் சந்தையில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு வியாபாரிகள் கோரிக்கை

(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் உப அலுவலகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பொதுச் சந்தையில் இதுவரை அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித்தரவில்லை என வியாபாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நீர்வசதியோ, மலசலகூட வசதியோ இன்றி தாம் பெரிதும் கஷ்டப்படுவதாகவும் தெரிவித்ததுடன் இங்கு காணப்படுகின்ற கிணறும் சுத்திகரிப்பு செய்யப்படாமல் காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

பிரதேசசபைக்கு வரிசெலுத்தப்படுகின்ற போதிலும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லையெனவும் தெரிவித்தனர்.

பிரதேச சபையினர் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி அடிப்படை வசதிகளை விரைவாக ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியாபாரிகளும், மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-103)




# திருமறைக் கலாமன்றத்தின் தவக்கால ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் "களங்கம்" தவக்கால நாடகம் இன்று வெள்ளிக்கிழமை 26 ஆம் திகதி முதல் நாளை மறுதினம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இல.286,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

மூன்று நாட்களும் மாலை 4 மணிக்கும்,மாலை 6.30 மணிக்கும் இரண்டு காட்சிகளாக அரங்கேறவுள்ள களங்கம் நாடகத்தின் ஒரு காட்சிக்கு 150 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்றும், கொரோனா தடுப்பு சுகாதார நடவடிக்கைகள் இறுக்கமாக பேணப்படும் என்றும் திருமறைக் கலாமன்றம் அறிவித்துள்ளது.

இம்முறை சிறிய தயாரிப்பாக மேடையேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(5-4)



கடந்த ஜனவரி மாதம் மன்னாரில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்று படகு பழுதடைந்த நிலையில் மாலைதீவு கரையில் கரையொதுங்கிய பின் உயிரிழந்த கரவெட்டி மேற்கைச் சேர்ந்த செல்வராஜா ஜெயராமின் குடும்பத்தினருக்கு ஒரு இலட்சம் (100,000) ரூபா உதவிநிதியை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரான்ஸ் கிளை உறுப்பினர் விஜயபாலன் பங்களிப்பில் நேற்று முன்தினம் கரவெட்டி பிரதேசசபையின் 15ஆம் வட்டாரச் செயலாளர் திருமதி இலங்கேஸ்வரன் மங்கையற்கரசி தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது. (படம்: மகாலிங்கம்)

# யாழ்.மாநகர சபைப் பகுதியில் விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்து அரியாலை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ARV) வழங்கப்படவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

அந்தவகையில் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அரியாலை சனசமூக நிலையம் பூங்கன்குளம் வீதி, முற்பகல் 11 மணிக்கு பென்ரிக்கோஸ் லேன், பிற்பகல் 2.30 மணிக்கு தியாகராசா படிப்பகம் கண்டி வீதி, அரியாலை.

5ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சரஸ்வதி சனசமூக நிலையம், கண்டி வீதி அரியாலை, முற்பகல் 11 மணிக்கு மிருக வைத்திய நிலையம் ஏ.வி றோட் அரியாலை, பிற்பகல் 2.30 மணிக்கு பிரப்பங்குளம் அம்மன் கோவிலடி, இலந்தைக்குளம் வீதி.

6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கலைமகள் சனசமூக நிலையம் அரியாலை, முற்பகல் 11 மணிக்கு காந்தி சனசமூக நிலையம் அரியாலை, பிற்பகல் 2.30 மணி அருணோதயா சனசமூக நிலையம் அரியாலை.

7 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு திருமகள் சனசமூக நிலையம் அரியாலை, முற்பகல் 11 மணிக்கு மலர்மகள் சனசமூக நிலையம் அரியாலை, பிற்பகல் 2.30 மணிக்கு பாரதி சனசமூக நிலையம் நாயன்மார்கட்டு செம்மணி வீதி.

8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அம்பாள் சனசமூக நிலையம், பேச்சியம்மன் கோவிலடி, முற்பகல் 11 மணிக்கு மகேஸ்வரி பாடசாலை அருகில் நாயன்மார்கட்டு, பிற்பகல் 2.30 மணிக்கு கலைவாணி சனசமூக நிலையம் பொன்னம்பலம் வீதி.

9ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு முள்ளி வீதி அரியாலை, முற்பகல் 11 மணிக்கு ஆள்காட்டி வீதி அருளம்பலம் வீதிச் சந்தி, பிற்பகல் 2.30 மணிக்கு ராஜேஸ்வரி வீதி அரியாலை.

12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு கனகரட்ணம் வீதி, நாவலர் வீதிச்சந்தி அரியாலை, முற்பகல் 11 மணிக்கு கனகரட்ணம் மகா வித்தியாலயம் அருகில் நாவலர் வீதி, பிற்பகல் 2.30 மணிக்கு பாரதி வீதி முதலியார் வீதிச் சந்தி அரியாலை.

15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதி , றக்கா வீதிச் சந்தி, முற்பகல் 11 மணிக்கு பேரின்பநாயகம் வீதி அரியாலை, பிற்பகல்2.30 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதி, நாவலர் வீதிச் சந்தி.

16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சாஸ்திரியார் வீதி, அரியாலை, முற்பகல் 11 மணிக்கு அருளம்பலம் வீதி (சந்தனமாதா ஒழுங்கை), பிற்பகல் 2.30 மணிக்கு கச்சேரி கிழக்கு புகையிரத பாதை (ஒழுங்கை) ஆகிய இடங்களில் தடுப்பூசி ஏற்றல் இடம்பெறும். (5-4)

# பொன் விழா

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இடம்பெறும் பொன் விழா நாளை 27 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் சங்கத் தலைவர் சி.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான மு.நந்தகோபாலன் கலந்து கொள்வார்.

(5-4-6-60)

# குளத்தினை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(வரணி)

மீசாலை கமநலசேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட இடைக்குறிச்சி வரணி கமக்கார அமைப்பின் கீழ் உள்ள மாவில்வெளி பெரியகுளமானது அறுபது வருடங்களுக்கு மேலாக எவ்வித புனரமைப்புமின்றி சேறும் சகதியும் நிறைந்து தூர்ந்து போகும் நிலையில் உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இந்தக்குளமானது இடைக்குறிச்சி கிராம மக்களின் முக்கிய நீராதாரமாக காணப்படுவதுடன் கால்நடைகள் நீர் அருந்துவதற்கும், விவசாயிகள் தோட்டப்பயிர்களை மேற்கொள்வதற்கும்,மக்கள் நீராடுவதற்கும் பயன்படுவதாக குறிப்பிடுகின்றனர்.

குளத்தின் அபிவிருத்தி தொடர்பாக கடந்த வருடங்களில் கமக்கார அமைப்பினர் மற்றும் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதிலும் எவ்வித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த வருடத்திலாவது இக்குளத்தினைப் புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (5-4-103)



வன்னி தமிழ் மக்கள் ஒன்றியத்தின் பசுமைப் புரட்சி செயற்றிட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் புதன்கிழமை சாவகச்சேரி-சங்கத்தானை ஸ்ரீமுருகன் முன்பள்ளிச் சிறார்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:-சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்றப்பட்டிருக்கும் இலங்கைக்கு எதிரான தீர்மானம்; தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது

## சர்வதேச மன்னிப்புச் சபை

(கொழும்பு)
ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டிருக்கும் புதிய தீர்மானம் 30 வருடகாலப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி வழங்கப்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், புதிய தீர்மானத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை முழுமையான நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் முன்வரவேண்டும் என்றும் அந்தச்சபை வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை அதிலிருந்து தவறும் பட்சத்தில் மனித உரிமைகள் பேரவையினால் சுயாதீனமான பொறுப்புக் கூறல் பொறிமுறையொன்று நிறுவப்படக்கூடும் என்றும் அந்தச் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டிருக்கும் புதிய தீர்மானம் மிக முக்கியமான முன்நகர்வு என தெரிவித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் இந்தத் தீர்மானத்தின் ஊடாக சர்வதேசத்தின் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுவதாகவும் அந்தச் சபை தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமின்றி, நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுவதற்கான ஆதாரங்களை ஐ.நா.மனித உரிமைகள் அலுவலகம் திரட்டுவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த காலத்தில் இடம்பெற்ற மற்றும் தற்போது இடம்பெறும் மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் தொடர்ந்தும் தண்டனைகளில் இருந்து தப்பிக்கும் நிலை தொடர்வதற்கு அனுமதிக்க முடியாது என்ற சமிக்ஞை இந்த தீர்மானத்தின் ஊடாக தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என அந்தச் சபை வலியுறுத்தியுள்ளது.

இந்தத் தீர்மானத்தின் ஊடாக இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் கண்காணிக்கப்படுவதுடன், கடந்த கால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களும் திரட்டப்படும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை அந்த தெரிவித்துள்ளது. (நி-4)

## மானிப்பாய் கோ.ப.பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் அறிவித்தல்

மானிப்பாய் கோவில் பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுச்சபைக்கூட்டம் எதிர்வரும் 27.03.2021 நடைபெற இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை எமது சங்க பொதுச்சபை பிரதிநிதிகளுக்கு அறியத்தருகிறேன்.

(C-1805) தலைவர்


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: பூரட்டாதி கி.பா: 31' செவ் 11 சூரி 1 இல் உயரம்: 5'9" தகைமை/தொழில்: BBA,MBA,MCSE, MCSA,MCP,CIMA. Work-Accountant எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண். உள்நாடு மட்டும். தொ.இ: B/11657 | பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: கேட்டை கி.பா: 18' செவ் 5 சூரி 3 இல் உயரம்: 5'8" தகைமை/தொழில்:. A/L எதிர்பார்ப்பு: சாதாரண கல்வித்தகைமை, சொந்தத் தொழில், தனியார், அரசாங்க வேலை. வெளிநாடும் விரும்பத்தக்கது. தொ.இ: G/11731 |
| பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: ரோகினி கி.பா: 8' செவ் 11 சூரி 12 இல் உயரம்: 5'5" தகைமை/தொழில்: A/L, அமெரிக்கா கம்பனி, லண்டன் PR உள்ளது. எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும் தொ.இ: B/11658 | பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம்: சித்திரை கி.பா: செவ் 5 சூரி 9 இல் உயரம்: 5.5 தகைமை/தொழில்: BBA, தொழில்- DO எதிர்பார்ப்பு: படித்த தனியார் அரச தொழில் தொ.இ:G/11732 |
| பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: மிருகசீரிடம் கி.பா: 43 செவ் 2 சூரி.10 இல் உயரம்: 5'6" தகைமை/தொழில்: பொறியியல் பீடம் வெளிநாட்டில் படித்தவர், மணமகனுக்கு சொந்த கடை, கட்டட வாடகை, காணிகள் என மாதம் 500,000/= வருமானம் உண்டு. எதிர்பார்ப்பு: மெல்லிய அழகான பிள்ளை, உள் நாடு மட்டும் தொ.இ: B/11659 | பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: புரட்டாதி கி.பா: 31' செவ்.சூரி 8 இல் உயரம்: 5'6" தகைமை/தொழில்: BSC IT, தொழில் உதவிக்கல்விப்பணிப்பாளர் எதிர்பார்ப்பு: அரச, தனியார், அபிவிருத்தி உத்தியோகத்தர், எக்கவுண்டன்,என்ஜினியர், இவருக்கு சமமான உத்தியோகம், உள்நாடு மட்டும் தொ.இ: G/11733 |
| பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: சித்திரை கி.பா: 8 செவ் 9 சூரி 11 இல் உயரம்:5'10" தகைமை/தொழில்: A/L வெளிநாட்டுக் கம்பனி கணக்காளர் எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், உள் நாடு மட்டும் தொ.இ: B/11660 | பிறப்பு: 1995 இந்து நட்சத்திரம்: சித்திரை கி.பா: 54 செவ் 4 சூரி 1 இல் உயரம்: 4'4" தகைமை/தொழில்: B.COM Student எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்,வெளிநாடும் விரும்பத்தக்கது. தொ.இ: G/11739 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொடர்ந்தும் சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# இந்தியாவை கடுமையாக விமர்சிப்பது இலங்கைக்கு மேலும் அழுத்தத்தை அதிகரிக்கும்

## வெளிவிவகார அமைச்சர் தினேஷ்

(கொழும்பு)
இந்தியாவை கடுமையாக விமர்சிப்பது இலங்கைக்கு மேலும் அழுத்தத்தை அதிகரிக்கும் என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியா என்பது இலங்கையின் நட்பு நாடு. ஜெனிவாவில் இந்தியா எடுத்த தீர்மானம் இலங்கைக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

ஆனால் நாடு தற்போது சர்வதேச அழுத்தங்களை எதிர்நோக்கி வரும் நிலையில் அரசாங்கத்தில் உள்ள பங்காளிக்கட்சி இந்தியாவை கடுமையாக விமர்சிப்பது இலங்கைக்கு மேலும் அழுத்தத்தை அதிகரிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியாவால் இலங்கைக்கு தொடர்ந்தும் சோதனைதான் என அரசின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# புலம்பெயர் தொழிலாளர்களுக்கான தனிமைப்படுத்தலுக்கென 10 ஹோட்டல்கள்

(கொழும்பு)
நாடு திரும்பும் புலம்பெயர் இலங்கை தொழிலாளர்களுக்கான தனிமைப்படுத்தல் நிலையங்களாக தனியார் துறையில் 10 ஹோட்டல்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைக்கு கொவிட் தடுப்பு பணிக்குழு ஒப்புதல் அளித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

அதன்படி புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களாக வெலிகாமம், ஹிக்கடுவ, வாதுவ, திக்வெல்ல, நீர்கொழும்பு, அஹுங்கம மற்றும் தங்காலை ஆகிய இடங்களில் உள்ள ஹோட்டல் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 5 இலட்சத்திற்கு மேற்பட்ட நபர்கள் தனிமைப்படுத்தல் வசதிகளை பெற்றுக் கொள்ள முடியும். (நி-4)


சிவமயம்
## ஈழத்து சீரடியில்
### மஹா சண்டி ஹோமப் பெருவிழா
### 27.03.2021

அன்பான அடியார்களே!
26.03.2021- வெள்ளிக்கிழமை மாலை 6 மணி கடஸ்தாபனத்துடன் ஆரம்பம்
27.03.2021- சனிக்கிழமை காலை 6 மணி மஹா சண்டி ஹோமம்.

பிரதமகுரு-பிரம்மஸ்ரீ வாசு ஜெயவஸ்தாங்க குருக்கள்
(உரும்பிராய் சிவதர்மசாஸ்தா தேவஸ்தான பிரதமகுரு)

சர்வபோதகம் - பிரம்மஸ்ரீ மகாதேவ் குருக்கள் ஸ்ரீ வஸ்தாங்க குருக்கள்
(காயத்திரி பீடம் இனுவில்)

ஈழத்து சீரடி சாய் மந்திர்-நல்லூர் யாழ்ப்பாணம்
Liked
விருப்பு பக்கத்தினூடாக பூசைகளை பார்வையிடலாம்

ஆலயத்தினர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீர்விநியோகம் செய்யப்படும் இடங்களில் சிறுபோகம் மேற்கொள்ள முடியும்

(கண்டாவளை)

**கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் 17 ஆயிரத்து 610 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்டத் தின் பாரிய நீர்ப்பாசன குள மான இரணைமடு குளத் தின் கீழ் சிறுபோக பயிர்ச் செய்கை மேற்கொள்வது தொடர்பான கூட்டம் நேற்று கிளிநொச்சி மாவட்ட அரசா ங்க அதிபர் தலைமையில் கிளிநொச்சி கோவிந்தன் கடைச்சந்தியில் அமைந் துள்ள விவசாயிகள் சம்மே ளனக் கட்டடத்தில் நடை பெற்றது.



இதில் கிளிநொச்சி மாவட் டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடு குளத் தின் கீழ் இந்த ஆண்டு 17 ஆயிரத்து 610 ஏக்கர் நிலப் பரப்பில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்வதற் கான தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

அதன்படி இறுதி விதை ப்பு திகதி மற்றும் கால்நடை கட்டுப்பாடு, விவசாய காப் புறுதி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர் பாகவும் ஆராயப்பட்டு தீர் மானங் கள் நிறைவேற்றப்பட்டுள் ளன.

குறிப்பாக இரணைமடு குளத்தின் கீழ் நீர் விநி யோகம் செய்யக்கூடிய நிலப் பகுதிகளில் மாத்திரமே சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வது என்றும் வேறு எந்த இடத்திலும் கழிவு வாய்க்கால்களையோ அல்லது ஆறுகளையோ மறித்து எந்த பயிர்ச்செய்கை களையும் மேற்கொள்ள முடியாது. அத்துடன் நீர்ப் பாசனம் செய்ய முடியாத நிலப்பரப்புகளில் நெற் செய்கை மேற்கொள்ள முடி யாது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

குறிப்பாக சிறுபோக செய்கையின் போது கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளாக பயன்படுத்தக் கூடிய பகுதிகளும் அடையா ளப்படுத்தப்பட்டன.

மேற்படி மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடை பெற்ற கூட்டத்தில் பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் இராஜகோபு, இரணைமடு நீர்ப்பாசன பொறியியலாளர் செந்தில்குமரன், மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப் பாளர் அ. கேதீஸ்வரன், கரைச்சி மற்றும் கண்டா வளை பிரதேச செயலாளர் கள், மாவட்ட கமநல உத்தி யோகத்தர் மற்றும் துறை சார் அதிகாரிகள், விவசா யிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (5-4-315)

# கால்நடை வளர்ப்பினை ஊக்குவிப்பதற்கு வழிவகை எற்படுத்திக் கொடுக்க வேண்டும்

## `கிளி.மாவட்ட அரச அதிபர்

(கண்டாவளை)

எமது மாவட்டத்துக்கான போக்கினையும் பொருளாதாரத் தையும் தருகின்ற ஒன்றாக கால்நடைவளர்ப்பு காணப்படு கிறது இதனை ஊக்கு விப்ப தற்கான வழிவகைகளை ஏற் படுத்தி கொடுக்க வேண்டிய தேவை காணப்படுவதாக மாவ ட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித துள்ளார்

இரணைமடு குளத்தின் கீழான சிறு போக பயிர் செய்கை கூட்டம் நேற்று மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடை பெற்ற போது கருத்து தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் விவ சாயிகள் தமது பயிர் செய்கை களை பாது காப்பதற்கு பயிர் செய்கை பிரதேசங்களுக்கு வேலி அமைப்பதற்கான முயற்சி களை மேற்கொள்ள வேண்டும்.

கால்நடை வளர்ப்பு என்பது எமது மாவட்டத்தைப் பொறுத் தவரையில் வருமானத்தையும் எமது மாவட்டத்துக்கான போசாக்கினையும் தரக்கூடிய ஒன்றாக காணப்படுகின்றது அதனை நாங்கள் கைவிட்டு விட முடியாது அதற்கான வழி வகைகளை ஏற்படுத்தி கொடு க்க வேண்டியவர்களாகவும் நாங்கள் இருக்கின்றோம்

பயிர்களுக்கான வேலி களை அமைப்பதற்கான முயற் சிகளை விவசாயிகள் முன்னெ டுக்க வேண்டும்குறிப்பாக நேற்று முன் தினம் ஜனாதிபதியினு டைய தலைமையிலே கொழும பில் நடைபெற்றகூட்டத்திலும் கால்நடைகளுக்கான மேய்ச் சல் தரவை பற்றி கலந்துரை யாடப்பட்டது.

வனப் பிரதேசங்களிலேயே மேச்சல் தரவைகளை உரு வாக்குவதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ளுமா றும் தெரிவித்தார். அதன் அடிப் படையில் ஏற்கனவே அடையா ளம் காணப்பட்ட பகுதிகளில் மேச்சல் தர வைகளை அமைப் பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார் .

குறிப்பாக கிளிநொச்சி மாவட் டத்தின் இரணைமடு குளத தின் கீழ் இவ்வாண்டு 17 ஆயிர த்து 610 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற் கொள்ளப்படுகின்ற நேரம் உப உணவு பயிர்ச்செய்கை களை யும் முன்னெடுப்பதற்கு விவ சாயிகள் முன்வரவேண்டும் இதன் மூலம் எமது மாவட் டத்துக்கான போசாக்கு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் எனஅவர் மேலும் தெரி வித்தார்.(5-4-315)

# மணல் அகழ்வில் ஈடுபட்ட பத்துப் பேர் கைது



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கல்லாறு, பிரமந்த னாறு, மயில்வாகனபுரம் ஆகிய பகுதிகளில் தற்பொழுது மணல் அகழ்வுக்கு முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. இந் நிலையில் அப்பகுதிகளில் இராணுவத்தினரின் பாதுகாப் பையும் மீறி நேற்றைய தினம் அதிகாலை மணல் அகழ்வில் ஈடுபட்ட 10 பேரும் இராணு வத்தினரால் கைது செய்யப் பட்டுள்ளதுடன் அவர்கள் பயன்படுத்திய 3 டிப்பரும் 3 உழவு இயந்திரமும் கைப்பற் றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் தருமபுரம் பொலிஸ் நிலை யத்தில் ஒப்படைக்கப்பட்டு விசா ரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (5-4-316)

# வயல் காணிகளை விடுவிக்க ஜனாதிபதியிடம் மனு கையளிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரை துறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் உ.றனிஸ்லா வின் கோரிக்கை மனு ஜனா திபதி, பிரதமரிடம் கையளிக் கப்பட்டுள்ளது. கரைதுறைப் பற்றின் நித்தகை குளத்தின் கீழான வயல் நிலங்கள் வனவளத் திணைக்களத் திடம் இருந்து விடுவித்து தற்போது ஆறுமுகத்தான் குளத்தில் வயல் நிலமின்றி வாழ்கின்ற 110 குடும்பங் களுக்கு வழங்கப்பட வேண் டும் என்ற கோரிக்கை மனுவை கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப் பினர் முல்லைத்தீவு மாவ ட்ட ஒருங்கிணைப்பாளரு மாகிய அன்டனி ரங்க துஷார கடந்த செவ்வாய்க் கிழமை ஜனாதிபதியின் செயலாளரிடமும் பிரதமரிட மும் நேரிலும் மற்றும் காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திர சேன, வனவளத்துறை அமைச் சர் சி.பி.ரத்நாயக்க ஆகி யோரிடமும் நேரில் சென்று நித்தகை குளத்தில் வன வளத் திணைக்களத்திடம் இருந்து வயல் நிலம் விடுக் கப்பட வேண்டும் என்ற விடயங்கள் தெரியப்படுத்தப் பட்டுள்ளன.

பிரதேச சபை உறுப்பினர் உ.றனிஸ்லா நேரில் சென்று மனுவினைக் கையளிக்க முடியாத நிலையில் சக உறுப்பினரான அன்டனி ரங்க துஷார மூலம் கைய ளிக்கப்பட்டது.

இதற்கு பிரதமர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதிகளில் மக்கள் பயி ர்ச் செய்கைகளில் ஈடுபட்டி ருந்தால் காணிகளை விடு விப்பதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு பணிப்புரை கள் வழங்கினர். (5-4-350)

# ஏழு மில்லியன் செலவில் குடமுருட்டிகுளம் புனரமைப்பு

(அக்கராயன்)

குடமுருட்டிக் குளத்தினை கடந்த பெரு மழையின் போது பாதுகாத்த இராணுவத்தி னர், விவசாயிகளுக்கு நன் றிகள் என கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனப் பொறியிலாளர் ரி.ரிசியந்தன் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற குடமுருட்டிக் குளத்திற்கான சிறுபோக நெற் செய்கைக் கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குடமுருட்டிக் குளத்தினைப் பொறுத்த வரையில் வேகமாக நீர் வற்றுகின்ற நிலைமை காணப்படுகிறது.

காரணம் ஏனைய குளங்க ளில் குளத்தின் உட்பகுதியில் கிரவல் மண் காணப்படும். குடமுருட்டிக் குளத்தின் உட்பகு தியில் கிரவல் மண் இல்லை. இதன் காரணமாக வேகமாக நீர் வற்றுகின்ற நிலைமை உள் ளது.

கடந்த பெருமழையின் போது குளத்தினைப் பாதுகாப் பதில் இராணுவத்தினரும் விவ சாயிகளும் நீர்ப்பாசனத் திணை க்களத்திற்கு மிகுந்த ஒத்துழை ப்பு வழங்கி இருந்தனர்.

குடமுருட்டிக் குளத்தில் ஏழு மில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்பு வேலைகள் இடம் பெறவுள்ளன. சிறு போக நெற் செய்கையினை உரிய காலத் தில் வெற்றிகரமாக நிறைவு செய்து குளத்தின் வேலை களை முன்னெடுப்பதற்கு விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.(5-4-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

26.03.2021
பங்குனி 13, வெள்ளிக்கிழமை
திரயோதசி பின்னிரவு 4.43 மணிவரை
மகம் முன்னிரவு 7.50 மணிவரை
சுபநேரம் 6.15 - 7.45 மணிவரை
இராகுகாலம் 10.45 - 12.15 மணிவரை
சந்திராஷ்டமம்:- உத்தராடம், திருவோணம்
பிரதோச விரதம். வளவன்


மேஷம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாடு திருப்தி தரும் வகையில் அமையும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும்.


ரிஷபம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


மிதுனம்

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.


கடகம்

நன்மைகள் நடைபெறும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், வாக்கு மேன்மையுண்டு.


சிம்மம்

விருப்பங்கள் நிறைவேற கணபதியை வழிபட வேண்டிய நாள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்த கொள்வீர்கள், போசன சுகமுண்டு.


கன்னி

அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயமும் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


துலாம்

அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எதிர்கால வெற்றிக்கு திருப்பு முனையாக அமையும் நாள்.


விருச்சிகம்

தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், போசன சுகமுண்டு.


தனுசு

அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், குடும்பத்தினரிடையே இருந்த கருத்து முரண்டுபாடுகள் குறையும், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.


மகரம்

சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.


கும்பம்

இனிய அனுபவங்கள் ஏற்படலாம், மதிநுட்பத்தில் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.


மீனம்

உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

அறிவு நம்மை கைவிடும் போது நம்பிக்கையே உதவுகிறது

# சட்டவிரோதமான முறையில் குடிநீர் பெறுவோர் தொடர்பில் தகவல் தரவும்

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கோரிக்கை

(கொழும்பு)

**சட்டவிரோதமான முறையில் குடிநீரைப் பெற்றுக்கொண்டுள்ள நபர்களையும் இடங்களையும் கண்டறிவதற்கான விசேட வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க உள்ளதாகத் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.**

அறிக்கை ஒன்றின் மூலம் அந்த சபை இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

முறையற்ற விதத்தில் குடிநீரைப் பெற்றுக்கொண்டுள்ளவர்கள் குறித்து தகவல் வழங்குவோருக்கு, ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்கும் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்க உள்ளதாகவும் அந்தச் சபை குறிப்பிட்டுள்ளது.

இதேநேரம், சட்டவிரோமான முறையில் குடிநீரைப் பெற்றுக்கொண்டுள்ளவர்களுக்கு, நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் அபராதத்தை மேலும் அதிகரிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்படுகிறது.

முறையற்ற விதத்தில் குடிநீரைப் பெற்றுக்கொண்டுள்ளமையை, தகவல் தொழில்நுட்பம் ஊடாகக் கண்டறியும் வேலைத்திட்டமும் தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்பு சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# தொல்பொருள் அகழ்வுகள் குறித்த கலந்துரையாடல்

## பங்குபற்றுமாறு கூட்டமைப்புக்கு அழைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் பங்கேற்குமாறு, இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தொல்பொருள் அகழ்வுகள் தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனினால் நேற்று முன்தினம் பாராளுமன்றில் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை முன்வைக்கப்பட்டது.

இந்த விவாதத்தில் பதிலளித்து உரையாற்றிபோது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தொல்பொருள் விடயப்பரப்பானது, எந்தவொரு சமயத்திற்கோ அல்லது ஏதாவது ஒரு குழுவிற்கு வரையறுக்கப்பட்ட ஒன்றல்ல. தெற்கில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளாமல், ஏன் வடக்கில் மாத்திரம் அகழ்வுப் பணிகளை மேற்கொள்கின்றீர்கள் என பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

உலகில் இந்த நாட்டைப் போல, தொல்பொருள் சிறப்புமிக்க வேறு ஒரு நாடு எங்கும் இல்லை. இது எம் அனைவரினுடைய உரிமையாகும்.

எனவே, இந்த விடயத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளின் பங்கேற்புடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

அதில் அனைவரும் பங்கேற்று தங்களுடைய பிரச்சினைகளை முன்வைத்தால், எவ்வாறான முடிவை எடுக்கலாம் என்பதை ஆராயலாம் என இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார். (நி-4)

# தேங்காய் எண்ணெய்க்குப் பதிலாக சோயா எண்ணெய் அறிமுகம்

## வர்த்தக அமைச்சர் பந்துல



(கொழும்பு)

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

உலகின் புதிய சந்தை மாற்றங்களுக்கு அமைவாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவிருப்பதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் ... முன்தினம் பாராளுமன்றத்தில் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதிலளித்தார்.

இணையத்தள மூலமாக வர்த்தக நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இணையத்தள வர்த்தகத்தில் ஈடுபடுவோரை பாதுகாப்பதற்காக சட்டவிதிகள் இந்தத் திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்படவிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2003 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இதுவரையில் தற்போதைய இணையத்தள வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பில் முழுமைப்படுத்தப்படவில்லை. பல மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய ஒருவகை தேங்காய் எண்ணெய் சந்தைக்கு வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து வர்த்தக அமைச்சு நுகர்வோர் அதிகார சபையின் ஊடாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறான தேங்காய் எண்ணெய் சந்தையில் இருக்குமாயின், அது தொடர்பாக தகவல்களை வழங்கும் உரிமை நுகர்வோருக்கு உண்டு.

தேங்காய் எண்ணெய்க்கு பதிலாக சோயா எண்ணெயை அறிமுகப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் என்று அமைச்சர் தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கிணற்றுக்குள் வைர மோதிரம்



தொடர்ந்து, "கிணற்றுள் இறங்கினால் யார் வேண்டுமானாலும் மோதிரத்தை எடுத்து விடலாம்.

ஆனால் யாராவது கிணற்றுக்குள் இறங்காமலே அந்த மோதிரத்தை எடுக்க முடியுமா?" என்று கேட்டார்.

"முடியவே முடியாது, பிரபு!" என்றார் கூட இருந்த பிரமுகர் ஒருவர். "முடியாதது என்று ஒரு காரியமும் இல்லை.

முயன்று பாருங்களேன்" என்று அக்பர் சொல்ல, "பிரபு! அது யாராலும் செய்ய முடியாத காரியம்" என்றார் அதே பிரமுகர். மற்றவர்களும் அதை ஆமோதித்தனர்.

"பீர்பால்! நீ என்ன நினைக்கிறாய்?" என்று அக்பர் கேட்க, "அதைப் பற்றித்தான் நானும் யோசிக்கிறேன்" என்ற பீர்பால், தன் தலைப் பாகையை அவிழ்த்து விட்டுத் தனது தலையைச் சொறிந்தார்.

"தலையைச் சொறிந்தால் மட்டும் யோசனை தோன்றிவிடுமா?" என்று மிட்டாலால் என்ற அதிகாரி பீர்பலை நோக்கி ஏளனத்துடன் கேட்டார்.

"தலையைச் சொறிந்தால் எனக்கு நல்ல யோசனை தோன்றும். ஆனால் உங்களுக்குத் தோன்றாது!" என்று பீர்பால் லாலை நோக்கிக் கூறினார்.

"எனக்குத் தோன்றாது. ஆனால் உனக்குத் தோன்றுமோ? அது எப்படி?" என்று மிட்டாலால் கேலியாகக் கேட்க, "எனக்கு மூளை இருக்கிறது. அதனால் தலையைச் சொறிந்தால் மூளை வேலை செய்யும். ஆனால் உங்களுக்கு என்ன செய்தாலும் யோசனை தோன்றாது" என்று பீர்பால் அவனுக்கு பதிலடி கொடுத்தார்.

"பிரபு! எனக்கு யோசனை தோன்றிவிட்டது!" என்று பீர்பால் உற்சாகத்துடன் கூற, "அப்படியா? நீ எப்படி மோதிரத்தை கிணற்றுள் இறங்காமலே எடுப்பாய்?" என்று ஆர்வத்துடன் அக்பர் கேட்டார்.

நூலின் மறுமுனையை கிணற்றுக்கருகே இருந்த ஒரு மரத்துடன் சேர்த்துக் கட்டினார்.

(தொடரும்)

# மகாபாரதம்




அதை எடுத்துக்கொண்டு நாட்டுக்குச் சென்ற பிருகத்ரதன், அதைத் தனது இரண்டு மனைவியருக்கும் பகிர்ந்து கொடுத்தான்.

இதனால் இருவரும் கர்ப்பமுற்றனர். ஆனாலும் பாதிப் பழத்தையே ஒவ்வொருவரும் உண்டதால் அவர்கள் இருவருக்கும் ஒரே பிள்ளை பாதி பாதி பிள்ளைகள் இறந்து பிறந்தன.

அதைக் கண்டு திகிலுற்ற பிருகத்ரதன் அவ்விரு பாதிப் பிள்ளைகளையும் நகருக்கு வெளியே எறிந்துவிடுமாறு ஆணையிட்டான்.

மனிதர்களைத் தின்னும் இராட்சசியான ஜரா என்பவள், பாதி பாதி பிண்டங்களை கண்டு அவற்றை எடுத்துச் செல்வதற்காக இரண்டையும் சேர்த்த போது அவ்விரண்டும் இணைந்து ஒரு ஆண் பிள்ளை யானது.

அதன் அழுகுரல் கேட்டு இரக்கப்பட்ட அந்த இரா[illegible]சசி அக்குழந்தையை எடுத்துச்சென்று அரசனிடம் கொடுத்து, அது தனக்குக் கிடைத்த கதையையும் சொன்னாள்.

அது தன்னுடைய குழந்தையே என்று அறிந்த அரசன் அதற்கு, ஜரா என்ற அந்த ராட்சசியின் பெயரை அடியொற்றி ஜராசந்தன் என்று பெயரிட்டான்.

அரசவைக்கு வந்த சந்திர கௌசிகர், ஜராசந்தனைப் பார்த்துவிட்டு, அவன் ஒரு புகழ் பெற்ற சிவபக்தனாக விளங்குவான் என்று கூறிச் சென்றார்.

ஜராசந்தன், மகத நாட்டின் ஆற்றல் மிக்க மன்னனாகிப் பெரும் புகழ் ஈட்டினான்.


மகத நாட்டைப் பல திசைகளிலும் விரிவுபடுத்தினான். பல மன்னர்களை அடக்கி மகதப் பேரரசனாக முடிசூட்டிக் கொண்டான்.

தனது மகளொருத்தியின் கணவனான கம்சனைக் கொன்ற கிருஷ்ணன் (கண்ணன்) மீது வெறுப்பைக்கொண்ட அவன், கண்ணன் ஆண்ட மதுராவைப் பதினெட்டு முறை முற்றுகையிட்டுத் தாக்கியதாக மகாபாரதம் கூறுகிறது.

ஒவ்வொரு முறையும் ஜராசந்தன் தோல்வியையே தழுவியபோதும், மிகவும் களைப்புற்றுப் பலவீனம் அடைந்த கண்ணன் மதுராவை விட்டுத் துவாரகைக்குச் சென்றான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு கால்பந்து திடல் அளவான கடலில் மிதக்கும் சூரியசக்தி பண்ணை



(சிங்கப்பூர்)

உலகெங்கும் மின்சாரத்துக்கான மாற்று ஏற்பாடு பரவலாக விவாதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் சிங்கப்பூரில் மிதக்கும் சூரிய சக்தி பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய சூரிய சக்தி பண்ணைகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

இந்நிலையில் சிங்கப்பூர், மலேசியாவுக்கு இடையேயான ஜோகூர் நீரிணையில், கடல் மீது மிகப் பெரிய சூரிய சக்தி பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 13,312 சூரிய விசைத் தகடுகளை இணைத்து அமைக்கப்பட்டுள்ள இந்த பண்ணை பிரமாண்டமாக காட்சி அளிக்கிறது. சரியாகச் சொன்னால் ஏழு கால்பந்து திடல்களுக்கு சமமான பரப்பளவில் இந்தப் பண்ணையை அமைத்துள்ளனர்.


இந்த மிதக்கும் சூரிய சக்திப் பண்ணையின் செயற்பாட்டுக்காக நாற்பது மாறு திசை மின்னோட்ட சாதனங்களும், 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மிதவைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் சுமார் ஆறு மில்லியன் கிலோவாட் மணி நேர எரிசக்தியை இந்தப் பண்ணை மூலம் உற்பத்தி செய்ய முடியும் என கணிக்கப்பட்டுள்ளது.

கடல் நீர்ப்பரப்பின் மேலே அமைக்கப்பட்டுள்ள இந்த மிதக்கும் சூரிய சக்திப் பண்ணையில் ஏராளமான மின் பனல்களும், 22 கிலோவாட் சக்தி கொண்ட டிரான்ஃபார்மர்களும் உள்ளன.

இந்த சூரிய சக்தி பண்ணையை அமைக்க ஓராண்டு காலம் ஆனதாக தெரிவித்துள்ளார் சன்சீப் குழுமத்தின் தலைமைச் செயல் அதிகாரி ப்ரேன்க் புவான் (Frank Phuan). இந்த நிறுவனம்தான் சிங்கப்பூரின் ஆகப்பெரிய இந்தச் சூரிய சக்தி பண்ணையை அமைத்துள்ளது. (நி-4-8)

## மாதவனுக்கு கொரோனா



(சென்னை)

தமிழ், தெலுங்கு, இந்தி என பல்வேறு மொழி படங்களில் நடித்து பிரபலமான நடிகர் மாதவனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

டுவிட்டர் பதிவு மூலம் இதனை உறுதிப்படுத்தி உள்ள மாதவன், தான் உடல்நலம் தேறி வருவதாக குறிப்பிட்டுள்ளார். (நி-8)

## அமீர் கானுக்கு கொரோனா



(டில்லி)

பிரபல இந்தி நடிகர் அமீர் கானுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக அமீர் கானின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

அமீர்கானுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர் வீட்டில் தனிமைப் படுத்திக்கொண்டு சிகிச்சை நடைமுறைகளைப் பின்பற்றி வருகிறார். (நி-4-8)

# வெளிநாடுகளுக்கு செல்வோர் மீது ரூபாய் 5 இலட்சம் அபராதம்

(லண்டன்)

தற்போது பிரிட்டனின் அண்டிய நாடுகளில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் கொரோனா வேகமாக பரவி வருகின்றது.

எனவே நிலைமையை கட்டுக்குள் வைக்கும் நோக்கில், பிரிட்டனில் இருந்து வெளி நாடுகளுக்கு செல்வோர் மீது அபராதம் விதிக்க அந்நாட்டு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

அதன்படி, பிரிட்டனில் இருந்து வெளிநாடுகளுக்கு பயணிப்போர் மீது தலா 5000 பவுண்ட் (5 இலட்சம் ரூபாய்) அபராதம் விதிக்கப்படும் என அந் நாட்டின் சுகாதார துறை செயலாளர் மாட்ஹேன்காக் தெரிவித்துள்ளார்.

ஜூன் மாதம் இறுதிவரை இந்த அபராதமுறை அமுலில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

## தடுப்பூசி போட்டால் டோனட் இலவசம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்பவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக கிரிஸ்பி கிரீம் எனும் நிறுவனம் தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களுக்கு இந்த ஆண்டு முழுவதும் தங்கள் கடைகளில் டோனட் இலவசமாக வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

தடுப்பூசி போட்டுக் கொண்ட அட்டையைக் காண்பித்து தினமும் ஒரு டோனட்டை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவித்துள்ளது. (நி-4-8)

## ஒரே நாளில் 53,476 தொற்று

(டில்லி)

இந்தியாவில் கொரோனா பாதிப்பு நிலவரம் குறித்த அறிக்கையை நேற்று மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டது.

குறித்த அறிக்கையில் 24 மணி நேரத்தில் 53,476 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஒரேநாளில் 251 பேர் மரணம் அடைந்துள்ளனர்.

கடந்த 5 மாதங்களிலும் ஆபத்தான நிலை இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

## ககன்யான் திட்டத்திலுள்ள வீரர்களின் விண்வெளி பயிற்சி நிறைவு



(டில்லி)

இந்தியா விண்வெளிக்கு மனிதர்களை அனுப்ப உத் தேசித்துள்ள ககன்யா திட்டத்தின் கீழ், விண்கலனில் பயணம் செய்ய தேர்வாகியிருக்கும் நான்கு இந்திய விமானப் படை அதிகாரிகள் தங்களின் விண்வெளி பயிற்சியை ரஷ்யாவின் மொஸ்கோ நகருக்கு அருகே உள்ள ஸ்வியோஸ்ட்னி கொரோடொக் நகரில் நிறைவு செய்துள்ளனர்.

விண்வெளி வீரர்களை தாழ் வட்டப்பாதையில் சுழலும் விண்கலன் மூலம் விண்வெளிக்கு அனுப்புவதே ககன்யான் திட்டத்தின் நோக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

# ஏவுகணை உருவாக்க தடைவிதித்த போதும் ஏவுகணைகளை ஏவிய வடகொரியா


(பியாங்யாங்)

வட கொரியா ஒரு வாரத்தில் இரண்டாவது முறையாக ஒரு ஜோடி கண்டம் விட்டு கண்டம் பாயும் பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஜப்பான் கடலுக்குள் ஏவி சோதனை செய்துள்ளது.

வட கொரியா தனது கிழக்கு கடற்பரப்பில் இரண்டு சந்தேகத்திற்குரிய ஏவுகணைகளை நேற்று ஏவியது என்று ஜப்பானிய பிரதமர் சுகா யோஷிஹைட் வியாழக்கிழமை தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களின் கீழ் வட கொரியா பாலிஸ்டிக் ஏவுகணைகளை உருவாக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நடவடிக்கை டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு முன்னதாக பதற்றத்தைத் தூண்டுவதாகவும், வட கொரியா கொள்கையை இறுதி செய்யும் பிடன் நிர்வாகத்தின் மீது அழுத்தத்தை அதிகரிக்கும் வகையிலும் அமைந்துள்ளது.



இந்த ஏவுகணை சோதனை வட கொரியாவின் சட்டவிரோத ஆயுதத் திட்டம் அதன் அண்டை நாடுகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஏற்படுத்தும் அச்சுறுத்தலை எடுத்துக்காட்டுகிறது என்று அமெரிக்க இராணுவத்தின் இந்தோ-பசுபிக் கட்டளை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஜப்பான் சீனாவில் உள்ள தனது தூதரகம் மூலம் முறையான போராட்டத்தை நடத்தியது மற்றும் இந்த சோதனை பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்துவதாகக் கூறியது. அதே நேரத்தில் தென் கொரியாவின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியது.

ஜப்பானின் கடலோர காவற் படை அந்நாட்டு நேரப்படி காலை 7 மணிக்குப் பின்னர் முதல் ஏவுகணை ஏவப்பட்டதாக கூறியது.

இது சுமார் 420 கி.மீ (260 மைல்) பறந்தது. அதன்பிறகு இரண்டாவது ஏவுகணை 20 நிமிடங்கள் பின்னர் ஏவப்பட்டதாகவும், அது சுமார் 430 கி.மீ (270 மைல்) பறந்தது என்று கூறியுள்ளது. (நி-4-8)

# அணு உலைக்கு எதிராக குரல் கொடுக்கும் சீமான்

(டில்லி)

அணுகுண்டின் மேல் அமர்ந்திருப்பதும், அணு உலைக்கு அருகில் குடியிருப்பதும் ஒன்றுதான் என நாம் தமிழர் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

சட்டசபை தேர்தலை முன்னிட்டு திருப்போரூரில் இடம் பெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசிய அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், கல்பாக்கம் அணு உலை காரணமாக 14 கிராமங்களில் பத்திர பதிவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சுமார் 2 அரை ஆண்டுகளுக்கு மேலாக அணு உலைக்கு எதிராக போராடி வருவதாகவும், இதற்காக இதுவரை 700 இற்கும் மேற்பட்ட வழக்குகள் போடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மத்திய அரசு எல்லாவற்றையும் தனியார் மயமாக்கி வருவதாக தெரிவித்த அவர், தமிழக மக்கள் முதல் அமைச்சர்களை தேர்வு செய்வதில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தலில் விமலுடன் இணையும் சுதந்திரக்கட்சி?

(கொழும்பு)

"மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பில் எந்தவொரு கட்சியுடனும் தமது கட்சி இன்னும் பேச்சு நடத்தவில்லை" என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணி அரசில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி ஆகியன பங்காளிக் கட்சிகளாக அங்கம் வகிக்கின்றன.

இந்நிலையில் வருகின்ற மாகாண சபைத் தேர்தலில் இவ்விரு கட்சிகளும் கூட்டணி அமைத்து தனித்துக் களமிறங்கும் என வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் வினவியபோதே அமைச்சர் மகிந்த அமரவீர மேற்கண்டவாறு கூறினார்.

"மாகாண சபைத் தேர்தலில் இரு கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் இன்னும் பேச்சு நடைபெறவில்லை. அது தொடர்பில் கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை" எனவும் அமைச்சர் மகிந்த அமரவீர கூறினார்.

அதேவேளை, தற்போதைய அரசைப் பலவீனப்படுத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் இடமளிக்காது எனவும், ஐக்கிய தேசியக் கட்சி தரப்புடன் இணைந்து பயணிக்கும் திட்டம் இல்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (நி-4)

# 72 நீதிபதிகளுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

நீதவான் நீதிமன்ற நீதிபதிகள் உட்பட 72 நீதிபதிகளுக்கு இடமாற்றம் வழங்க நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

வருடாந்த இடமாற்றத்தின் அடிப்படையில் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் விதத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் கொழும்பு பதில் பிரதான நீதவான் ஆர். எம். எஸ். பி. சந்திரசிறி கொழும்பு பிரதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். (நி-4)

# இலங்கைக்கு எப்போதும் சோதனை கொடுக்கும் நாடு இந்தியா

## முஸம்மில் சீற்றம்

(கொழும்பு)

இந்தியா எப்போதும் இலங்கைக்கு சோதனை கொடுக்கும் நாடு என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் ஊடக சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"அண்டைய நாடு, பெரிய அண்ணன் என்று சொல்லப்படும் இந்தியாவின் செயற்பாடு எமக்கு மிகுந்த கவலை அளிக்கிறது. இந்தியா எப்போதும் இலங்கைக்கு சோதனை கொடுக்கும் நாடு. இலங்கைக்கு எதிரான நாடு இந்தியா. 13வது திருத்தச் சட்டத்தை எப்போதும் அருகில் வைத்துக் கொண்டு தான் இலங்கைக்கு எதிராக இந்தியா செயற்படும்.

நேபாளம் எதிர்ப்பு தெரிவித்ததை நாம் அறிவோம். நேபாளம் என்பது பொருளாதார ரீதியில் இந்தியாவின் முழுமையான கட்டுப்பாட்டில் உள்ள நாடு. அதனால் இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே நேபாளத்திற்கு வாக்களிக்க முடியாமல் போனது" என அவர் தெரிவித்தார். (நி-4)

# போலி ஆவணங்களை பயன்படுத்தி வாகன விற்பனை- நால்வர் கைது

(குருநாகல்)

வாடகைக்கு வாகனங்களைப் பெற்று அவற்றுக்கான போலி ஆவணங்களை தயாரித்து விற்பனை செய்த நால்வர் சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

குருநாகலைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர்கள் நீண்ட நாட்களாக இவ்வாறு மோசடி செய்துள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

அத்தோடு இவர்கள் கொள்ளையிடும் வாகனங்களின் இலக்க தகடுகளை மாற்றி அவற்றையும் விற்பனை செய்துள்ளனர். சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப்புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)

# கொத்மலை நீர்த்தேக்கத்தில் பெண்ணின் சடலம்



(ஹற்றன்)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து நேற்று பெண்ணின் சடலம் மீட்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமொன்று மிதப்பதைக் கண்டு பிரதேச வாசிகள் தலவாக்கலை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். அதன்பின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி-4)




**சுதர்சினி**

வெற்றி வந்தால்
பணிவு அவசியம்
தோல்வி வந்தால்
பொறுமை அவசியம்
எதிர்ப்பு வந்தால்
துணிவு அவசியம்
எது வந்தாலும்
நம்பிக்கை அவசியம்

**சதிக்சன்**

மனசுக்கு கஷ்டமாக இருக்குன்னு சொன்னா ஆளு ஆளுக அட்வைஸ் பண்ண வருவாங்க



கொஞ்சம் பணத்துக்கு கஷ்டமா இருக்குன்னு சொல்லிப் பாருங்க எல்லாரும் ஓடிப் போயிடுவாங்க

**அஜந்தா**

தந்தை : எக்ஸாம் ஹோலிலே தூங்கிட்டு வரேன்னு சொல்றியே வெட்கமில்லை




மகன் : நீங்கதானேப்பா கேள்விகளுக்கு விடை தெரியலைன்னு முழிச்சிட்டு இருக்காதேன்னு சொன்னீங்க.....!

**அருண்**

நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதும் மண்டியிடுவதில்லை



**தனுசா**

ஒருவர்:எதுக்கு பொலிஸ்காரங்களை அடிச்சேய்?
குற்றவாளி : என் வழியில குறுக்க வந்தாங்க
ஒருவர் : உன் வழியா...?
குற்றவாளி : ஆமா...நான் தப்பிச்சு ஓடும் போது குறுக்க வந்தாங்க

**சயாத்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சுவாசிப்பதற்கு இடமளியுங்கள்' காடழிப்பிற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

காடழிப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து "சுவாசிப்பதற்கு இடமளியுங்கள்" என்ற தொனிப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தி நேற்று முன்தினம் புதன் கிழமை கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தது.



கொழும்பு 7 இல் உள்ள விஹாரமகா தேவி பூங்கா வளாகத்தில் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களான துஷார இந்துனில், நளின் பண்டார மற்றும் ஹெக்டர் அப்புஹாமி "சுற்றாடல்" என்று சிங்கள மொழியில் எழுதப்பட்ட சவப்பெட்டியை சுமந்து சென்றவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.(நி-4)

# தடுப்பூசி ஏற்றுமதியை இடைநிறுத்தியது இந்தியா இருந்தபோதும் 10 இலட்சம் தடுப்பூசிகள் வந்துசேரும்

## பேராசிரியர் சன்ன ஜயசுமன

(கொழும்பு)

இந்தியாவில் தடுப்பூசி ஏற்றுமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள போதிலும் முன்பதிவு செய்யப்பட்டுள்ள தடுப்பூசிகள் தாமதமின்றி இலங்கையை வந்து சேரும் என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

உள்நாட்டில் தடுப்பூசிக்கான தேவை அதிகரித்துள்ளதால், ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசிகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பணிகளை எதிர்வரும் ஏப்ரல் இறுதி வரை இந்தியா தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.


இந்த நிலையில், இலங்கைக்கு தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதில் சிக்கல் ஏற்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், இலங்கைக்கு தடுப்பூசிகள் பெற்றுக் கொடுக்கப்படும் என இந்தியா உறுதி அளித்துள்ளதாக சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அதன்படி, இலங்கையினால் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்காக முன்பதிவு செய்யப்பட்டுள்ள 10 இலட்சம் தடுப்பூசிகள் தாமதமின்றி இலங்கையை வந்து சேரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# அபிவிருத்தி என்ற பெயரில் நடைபெறும் தமிழர்களின் நில அபகரிப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும்

## பாராளுமன்றில் சாணக்கியன்

(மட்டக்களப்பு)



வடக்கு, கிழக்கில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொல்பொருள் என்ற பெயரில் தமிழ் மக்களின் வளங்கள் சுரண்டப்படுவதற்கு உறுதுணையாக இல்லாமல் அதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம் பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எங்களுடைய பாரம்பரியமான நிலங்களை அபகரிப்பதையும் எங்களுடைய மதஸ்தலங்களினுடைய அபகரிப்பு செய்வதனை நிறுத்திவிட்டு உண்மையிலேயே முழுமையான அபிவிருத்தித் திட்டங்களை கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும்.

உதாரணமாக தொல்பொருள் திணைக்களத்தினால் அன்புமுனை என்று சொல்லப்படும் ஒரு குளம் கூட கிரான் பிரதேசத்திலே இன்று வரைக்கும், அதற்கு நிதி ஒதுக்கப்பட்டும் அதனை செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

அதற்குரிய காரணம் தொல்பொருள் திணைக்களத்தினால் அந்த இடத்தினை அவர்களுக்குரிய இடமாக அடையாளப்படுத்தியுள்ளனர். இதன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அதே நேரத்தில் இன்று அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் நபர்கள், இன்று பாராளுமன்றத்தில் மட்டும் ஒரு ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் இதை கதைக்காமல், உண்மையிலேயே ஜனாதிபதியின் விசேட குழுவிற்கு இரண்டு தமிழர்களையாவது உள்வாங்க வைக்கலாம்.

அதனை விட்டுவிட்டு அபிவிருத்தி என்ற பெயரில் எங்களுடைய நில அபகரிப்பினை அவர்கள் நிறுத்த வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## குழந்தைகளின் மனச்சோர்வு

ஒரு வீட்டிலே ஒரு சிறுமி இருந்தாள். வயது பத்து இருக்கும். நன்றாக படிக்கின்ற பண்பான பெண். திடீரென்று என்ன ஆனது என்றால் படிப்பிலே ஆர்வம் குறைந்தது... தேர்விலே மதிப்பெண்களும் குறைய ஆரம்பித்தது....

மற்றபடி பழக்கவழக்கத்திலே எந்த மாறுதலும் இல்லை. எப்பொழுது பார்த்தாலும் வயிற்றுவலி என்று சொல்ல ஆரம்பித்தாள். அப்பா அம்மாவிற்கு ஒன்றும் புரியவில்லை. படிப்பிலே வேகம் குறைந்தது எதனாலே? வயிற்று வலிக்கு என்ன காரணம்? வேறு சில மாறுதல்களும் தெரிந்தது.

சுலபமான வேலைகளை முடிப்பதற்கு கூட மிகவும் நேரமானது.

எப்பொழுதும் சிரித்த முகத்தோடு இருந்த குழந்தைக்கு அடிக்கடி கோபம் வர ஆரம்பித்தது. தனிமையாக இருக்க வேண்டும் என்ற விருப்பம். இது மாதிரியான அறிகுறிகளுக்கு என்ன காரணம் என்பதை ஒரு டாக்டர் கண்டுபிடித்துச் சொன்னார்.

அந்தக் குழந்தையின் மனதிலே ஏற்பட்ட மனச்சோர்வு தான் இதற்குக் காரணம் என்றார் அவர். பெரியவர்களெல்லாம் எவ்வாறெனில்.. அவர்கள் மனதிலே உள்ளதை வெளியிலே சொல்லிவிடுவார்கள்.... மொழி அதற்கு உதவி செய்கிறது. குழந்தைகளுக்கு தங்கள் உணர்ச்சிகளை அப்படி வெளிப்படையாக சொல்லத் தெரியவில்லை.

முதல் அறிகுறியாக ...

படிப்பிலே கவனமும் ஆர்வமும் குறையும். அதன் பின்பு பரீட்சையிலே மார்க் குறையும். அதைப் பார்த்துவிட்டு பெற்றோர்கள் படி படி என்று நச்சரிக்க ஆரம்பிப்பார்கள். இதனாலே பிரச்சினை இன்னமும் அதிகமாகிவிடும்.

படிப்பில் மார்க் குறைகிறது என்றால் .... அதற்கான மற்றைய காரணங்களையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கத் தவறும் போது ... குழந்தை என்ன ஆகிறது... அதற்கு தன்னுடைய மனவேதனையை வெளியிலே சொல்லத் தயக்கம் ஏற்படுகிறது. இந்த நிலையிலே மன வேதனை உடம்பு வலியாக உருமாறி வெளிப்படுகிறது.

இதை சரியாகப் புரிந்து கொள்ளாமல் நம்முடைய குழந்தைக்கு என்னமோ ஏதோ என்று மருத்துவப் பரிசோதனை எல்லாம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். அது அனாவசியம்.

மனச்சோர்வுக்கு ஆளான சில குழந்தைகள் என்ன செய்யும் தெரியுமா? பள்ளிக்கூடத்திற்கு போகிறேன் என்று சொல்லிவிட்டு வேறு எங்கேயாவது போய் சுற்றிவிட்டு வருவார்கள்! மார்க் குறையும்போது மனசிலே ஒரு தாழ்வுணர்ச்சி வந்துவிடுகிறது.

85 மார்க் வாங்கும் குழந்தைக்கு தான் வாங்கிய மார்க்கை விட வாங்க முடியாத 15 சதவீத மார்க்கைப் பற்றித்தான் அதிகமாக கவலை ஏற்படும். குழந்தைகளுடைய மனச்சோர்வுக்கு என்ன காரணம்?

பாரம்பரிய குணங்கள், பெற்றோரின் வாழ்க்கை முறைகள், படிக்கச் சொல்லி தொந்தரவு செய்தல், வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள் குறைந்தளவு நேரமே குழந்தைகளிடம் செலவழித்தல்... பிரிந்து வாழக்கூடிய பெற்றோர்கள்... இப்படி இதெல்லாம் தான் காரணம்.

அதனாலே பெற்றோர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஒரு குழந்தை உடம்பு வலிக்கிறது என்று சொன்னால் .. அது மனச்சோர்வாலே கூட இருக்கலாம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். மருத்துவர்கள் அதைத் துல்லியமாக கண்டுபிடிக்க முடியும்.

சரி.. இந்த மனச்சோர்வுக்கு மருந்து இருக்கிறதா என்று கேட்டால் இருக்கிறது... அதற்குப் பெயர் அன்பு..! இந்த அன்பு பெற்றோர்களிடையேயும் வேண்டும்... பிள்ளைகள் பேரிலும் வேண்டும்.

ஒரு வகுப்பிலே ஆசிரியர் திருத்திய தேர்வுத்தாளை எல்லாம் மாணவர்களுக்கு கொடுத்துக் கொண்டிருந்தார். ஒரு பெண் அதை வாங்கிப் பார்த்துவிட்டு அழ ஆரம்பித்துவிட்டாள். ..

என்னம்மா மார்க் குறைந்துவிட்டதா.. என்று அதை திரும்ப வாங்கிப் பார்த்தார் ஆசிரியர். 85 மார்க் வாங்கியிருந்தாள். 85 வாங்கியிருக்கிறாயே இதற்குப் போய் அழலாமா? என்றார்.

இல்லை சேர் ... நான் 100க்கு 100 எதிர்பார்த்தேன். எதிர்பார்த்ததை விட இது குறைவு... அதனாலே அழுகை வந்துவிட்டது என்று சொல்லி அந்தப் பெண் வருத்தப்பட்டாள்.

சரி.. என்று சொல்லி ஏனைய மாணவர்களுக்கும் தேர்வுத்தாளைக் கொடுக்க ஆரம்பித்தார் ஆசிரியர்.


ஒரு பையன் வாங்கிப் பார்த்துவிட்டு சிரிக்க ஆரம்பித்துவிட்டான். ஆசிரியர் பார்த்தார். இவனுக்கு அதிக மார்க் இருக்கும் போலிருக்கிறதே என நினைத்துக்கொண்டு அதைத் திருப்பி வாங்கிப் பார்த்தார். பார்த்தால்...... 100 க்கு 15 வாங்கியிருக்கிறான். ஏன் சிரிக்கிறாய்? எனக் கேட்டார்.

சேர்... இது நான் எதிர்பார்த்ததை விட அதிகம். அதனாலே சிரிக்கிறேன்! என்றான் அந்தப் பையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

# புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறைமையும் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் - 2018



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

| அட்டவணை -10 | நியமிக்கப்படவேண்டிய பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 25% வீத (பெண்)உறுப்பினர்கள் எண்ணிக்கை | (26/4) = 6.5 |
| சராசரி | (51212/6.5) = 7878.76 |
| X கட்சி நியமிக்கும் பெண் உறுப்பினர்கள் | (27798/7878.76) =3.5 = 3 பெண் உறுப்பினர்கள் (தசம தானத்தைக் கருத்திற் கொள்ளாத முழு எண்) |
| Y கட்சி நியமிக்கும் பெண் உறுப்பினர்கள் | (23274/7878.76) =2.95 = 2 பெண் உறுப்பினர்கள் (தசம தானத்தைக் கருத்திற் கொள்ளாத முழு எண்) |

## உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் -2018

இதுபற்றி முன்னர் எழுதியிருந்தாலும் இப்போது விவரமாகப் பார்ப்போம். முதலாவது கலப்பு முறை உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள்-2018 பெப்ரவரி 10 இல் இடம்பெற்றன.

இத்தேர்தலில் 15.8 மில்லியன் வாக்காளர்கள் 341 உள்ளூராட்சி சபைகளில் (24 மாநகர சபைகள், 41 நகரசபைகள், 276 பிரதேச சபைகள்) இருந்து 8,356 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இம்முறைப்படி, 60%(5092) உறுப்பினர்கள் வட்டாரங்களில் இருந்து நேரடியாகவும், 40% (3264) உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையிலும் தேர்ந்தெடுக்கப்படுவர். இத்தேர்தல்களில் 70% வாக்காளர்கள் வாக்களித்தனர். பெரும் வன்முறைகள் எதுவுமின்றி வாக்களிப்புகள் இடம்பெற்றன. இலங்கை பொதுசன பெரமுன பெரும்பான்மையான சபைகளைக்கைப்பற்றியது.

## தேர்தல் விபரங்கள்

93 உள்ளூராட்சி சபைகளுக்கு (7 மாநகர சபைகள், 18 நகர சபைகள், 68 பிரதேச சபைகள்) நியமனப் பத்திரங்கள் 2017 டிசெம்பர் 11 முதல் 14 வரை ஏற்றுக் கொள்ளப்பட்டன. 466 வேட்பு மனுக்கள் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளில் இருந்தும், 57 மனுக்கள் சுயேட்சைக் குழுக்களிடமும் இருந்து மொத்தம் 523 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இவற்றில் 500 மனுக்கள் (447 கட்சிகளில் இருந்தும், 53 சுயேட்சைக் குழுக்களிடமும் இருந்து) ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஏனைய 248 சபைகளுக்கு (17 மாநகர சபைகள், 23 நகர சபைகள், 208 பிரதேச சபைகள்) வேட்புமனுக்கள் 2017 டிசெம்பர் 18 முதல் 21 வரை ஏற்றுக்கொள்ளப்பட்டன. மொத்தம் 1,582 வேட்புமனுக்கள் (1,399 கட்சிகளிடம் இருந்து, 183 சுயேட்சைக் குழுக்களிடம் இருந்து) கிடைக்கப்பெற்றன. இவற்றில் 1,553 மனுக்கள் (1,379 கட்சி, 174 சுயேட்சை) ஏற்றுக் கொள்ளப்பட்டன.

அனைத்து 341 உள்ளூராட்சி சபைகளுக்கும் 2018 பெப்ரவரி 10 சனிக்கிழமை அன்று தேர்தல்கள் நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் 2017 டிசெம்பர் 18 இல் அறிவித்தார். அஞ்சல் வழி வாக்களிப்பு 2018 ஜனவரி 25, 26 இல் இடம்பெற்றது. மொத்தமுள்ள 341 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 57, 066 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். 13,420 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெற்றன. 15,760,867 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றனர். காலி மாவட்டத்தைச் சேர்ந்த எல்பிட்டி பிரதேச சபைக்கு முறைப்பாடு ஒன்றை அடுத்து அங்கு தேர்தல் ஒத்திப்போடப்பட்டு,அத் தேர்தல் 2019 ஒக்டோபர் 11 இல் நடைபெற்றது.

## போட்டியிட்ட முக்கிய கட்சிகள

### ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி

ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டணி வெற்றிலை சின்னத்தில் சில மாவட்டங்களிலும், இலங்கை சுதந்திரக் கட்சி கை சின்னத்தில் சில மாவட்டங்களிலும் போட்டியிட்டது. 1991 ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதல் தடவையாக இலங்கை சுதந்திரக் கட்சி தனது கை சின்னத்தில் போட்டியிட்டது.

### ஐக்கிய தேசிய முன்னணி

ஐக்கிய தேசிய முன்னணியில் ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் யானை சின்னத்தில் போட்டியிட்டது. இக் கட்சிச் சின்னத்தில் சம்பிக்க ரணவக்க தலைமையில் ஜாதிக ஹெல உறுமய கட்சியும் போட்டியிட்டது. ரவூப் ஹக்கீம் தலைமையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சில சபைகளில் ஐக்கிய தேசிய முன்னணியின் கீழும், சில சபைகளில் தனித்தும் போட்டியிட்டது.

மனோகணேசன் தலைமையில் தமிழ் முற்போக்குக் கூட்டணி சில சபைகளில் ஐக்கிய தேசிய முன்னணியுடனும்,சில சபைகளில் ஏணி சின்னத்தில் ஒருமித்த முற்போக்கு கூட்டணி என்ற பெயரில் தனித்தும் போட்டியிட்டது.

### இலங்கை பொதுசன பெரமுன

இலங்கை சுதந்திரக் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கை பொதுசன முன்னணி என்ற பெயரில் புதிய கட்சி அமைத்து போட்டியிட்டார். இக்கட்சி பூ மொட்டு சின்னத்தில் போட்டியிட்டது.

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு,கிழக்கு மாகாணங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீடு சின்னத்தில் போட்டியிட்டது. இக் கூட்டணியில் சித்தார்த்தன் தலைமையில் புளொட் அமைப்பும் போட்டியிட்டது.

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சைக்கிள் சின்னத்தில் வட,கிழக்கு மாகாணங்களில் போட்டியிட்டது.

### தமிழ் முற்போக்குக் கூட்டணி

மனோகணேசன் தலைமையில் தமிழ் முற்போக்குக் கூட்டணி சில சபைகளில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து யானை சின்னத்தில் போட்டியிட்டது. அதே வேளையில், பின்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கு ஏணி சின்னத்தில் "ஒருமித்த முற்போக்கு கூட்டணி" என்ற பெயரில் தனித்துப் போட்டியிட்டது. போட்டியிட்ட உள்ளூராட்சி சபைகளாவன இரத்தினபுரி மாவட்டம் (பலாங்கொடை பிரதேச சபை, இம்புல்பே பிரதேச சபை, கொடக்கவெல பிரதேச சபை), கண்டி மாவட்டம் (கண்டி மாநகர சபை, நாவலப்பிட்டி நகரசபை,கம்பளை நகரசபை,பன்வில பிரதேச சபை, உடபலாத பிரதேச சபை, குண்டசாலை பிரதேச சபை, மெததும்பர பிரதேச சபை),கொழும்பு மாவட்டம் (கொழும்பு மாநகர சபை), மாத்தளை மாவட்டம் (மாத்தளை மாநகரசபை, மாத்தளை பிரதேச சபை, இறத்தோட்டை பிரதேச சபை)

சுருக்கமாகக் கூறின் மகிந்த ராஜபக்ஷ இலங்கை பொதுஜன பெரமுனவின் அதிகாரபூர்வமற்ற தலைவராகக் கருதப்படுகிறார், அதிகாரபூர்வமான தலைவர் ஜி. எல். பீரிஸ் ஆவார். ஜனநாயக இடதுசாரி முன்னணி ஒரு இடத்தில் தனித்தும் ஏனையவற்றில் இலங்கை பொதுஜன பெரமுனவுடன் சேர்ந்தும் போட்டியிட்டது.லங்கா சமசமாஜக் கட்சி 12 சபைகளில் தனித்தும் ஏனையவற்றில் இலங்கை பொதுஜன பெரமுனவுடன் சேர்ந்தும் போட்டியிட்டது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி எட்டு சபைகளில் தனித்தும் ஏனையவற்றில் இலங்கை பொதுஜன பெரமுனவுடன் சேர்ந்தும் போட்டியிட்டது. (நல்லாட்சிக்கான) ஐக்கிய தேசிய முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டது.அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 37 சபைகளில் தனித்தும், ஏனையவற்றில் ஐக்கிய தேசிய முன்னணியிலும் போட்டியிட்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 46 சபைகளில் தனித்தும், ஏனையவற்றில் ஐக்கிய தேசிய முன்னணியிலும் போட்டியிட்டது. தமிழ் முற்போக்கு கூட்டணி 14 சபைகளில் தனித்தும்,ஏனையவற்றில் ஐக்கிய தேசிய முன்னணியிலும் போட்டி யிட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி 208 சபைகளில் தனித்தும், 120 சபைகளில் இலங்கை சுதந்திரக் கட்சியிலும் போட்டியிட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 12 சபைகளில் தனித்தும், ஏனையவற்றில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியிலும் போட்டியிட்டது.தேசிய காங்கிரஸ் 10 சபைகளில் தனித்தும்,ஏனையவற்றில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியிலும் போட்டியிட்டது.தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெயரிலும், அதன் வீட்டு சின்னத்திலும் போட்டியிட்டது.தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பெயரிலும் அதன் சைக்கிள் சின்னத்திலும் போட்டியிட்டது.தமிழ் முற்போக்கு கூட்டணி ஜனநாயக மக்கள் முன் னணியின் பெயரிலும் அதன் சின் னத்திலும் போட்டியிட்டது.

இதைவிட மக்கள் விடுதலை முன்னணி,சுயேட்சைகள்,ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி,தமிழர் விடுதலைக் கூட்டணி,அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் போன்ற கட்சிகளும் போட்டியிட்டன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது

## சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பேண வேண்டும்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

எதிர்வரும் சிங்கள, தமிழ் புத்தாண்டைக் கொண்டாடும் போது மக்கள் அடிப்படை சுகாதார வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டுள்ள அந்தச் சங்கத்தின் உதவி செயலாளர் வைத்தியர் நவீன் டி சொய்சா, பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றாவிட்டால் கொரோனாத் தொற்றின் பாதிப்பு அதிகரிக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.


உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸின் பாதிப்பு நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

எனவே சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்காமல் மக்கள் தங்கள் வழக்கமான நடவடிக்கைகளைத் தொடர முடியாது எனத் தெரிவித்தார்.

சமூக இடைவெளியைத் தக்க வைத்துக்கொள்ளவும் முகமூடி அணிவது மற்றும் கைகளைக் கழுவுவதை மக்கள் தவறாது கடைப்பிடிக்க வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மக்கள் இந்த நடைமுறைகளைப் பின்பற்றினால் அது அவர்களின் குடும்பங்கள் மற்றும் நாட்டின் நல்வாழ்வுக்கு உதவும் என்றும் இது புத்தாண்டுக்குப் பின்னர் கொரோனாப் பரவலைக் குறைக்க உதவும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## ஆலயங்களுக்கு கோ தானம்!

நம்மிடம் உள்ளதை மற்றவர்களுக்குக் கொடுத்து வாழ வேண்டும் என்பது உயர்ந்த குணமாகும். இந்தக் குணம் மேம்பட வேண்டும் என்பதற்காகத்தான் நம் முன்னோர்கள் ஏழை - எளிய வர்களுக்கும் நாம் வழிபடும் ஆலயங்களுக்கும் தானம் செய்ய வேண்டும் என்ற உயரிய நெறிமுறையை உருவாக்கினார்கள்.

பொதுவாக நாம் பிறருக்கு வழங்குவது அதிகமாகவும் பிறரிடமிருந்து நாம் பெறுவது குறைவாகவும் இருக்க வேண்டும் என்பார்கள். அதுவும் ஆலயங்களுக்கு அதிக தானம் செய்ய தயங்கக் கூடாது.

அதுபோல ஆலயங்களுக்கு வருபவர்களுக்கும் தானம் செய்தல் வேண்டும். ஒருவர் செய்யும் தானம் அவரது பாவங்கள், கிரக தோஷங்கள் அனைத்தையும் போக்க வல்லது. புராணங்களிலும் வேதங்களிலும் இது தொடர்பான குறிப்புகள் ஏராளம் உள்ளன.

எனவே நம் தோஷங்களைப் போக்கிக் கொள்ளவாவது நாம் ஆலயங்களுக்கும் ஏழை - எளியவர்களுக்கும் தான - தர்மம் செய்ய வேண்டும்.

தானம் பெறும் ஏழை மனம் குளிர்ந்து "நல்லா இருக்கணும்" என்று முகம் மலர வாழ்த்தும் போது உங்களுக்கு மட்டுமல்ல உங்கள் வம்சமே வளம் பெறும். ஒருமுறை தானம் செய்து பார்த்தால் தான் அதில் உள்ள சுகம் பற்றி உங்களுக்குத் தெரியவரும்.

நாம் யாருக்கு, எப்போது, எப்படி தானம் செய்ய வேண்டும் என்பதில் விதி முறைகள் உள்ளன. பகவத் கீதையில் கிருஷ்ணர் தானத்தைச் சாத்வீக தானம், ராஜஸ தானம், தாமஸ தானம் என்று மூன்று வகையாகப் பிரித்துக் கூறியுள்ளார்.

தகுந்த இடத்தில், தகுந்த நேரத்தில் தகுதி உள்ளவர்களுக்கு எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் கொடுக்கப்படும் தானத்துக்கு சாத்வீக தானம் என்று பெயர்.

சிலர் எந்தத் தானம் செய்தாலும் அதில் பிரதிபலன் எதிர்பார்ப்பார்கள். அதற்கு ராஜஸ தானம் என்று பெயர். சிலர் வேண்டா வெறுப்பாக எரிச்சலுடன் தானம் செய்வார்கள். அதற்கு தாமஸ தானம் என்று பெயர்.

இப்படி இல்லாமல்..."நிறையக் கொடுக்க வேண்டும்" என்ற எண்ணத்துடன் தானம் செய்ய வேண்டும். அதுதான் உண்மையான தானம்.

குறிப்பாக வலது கை கொடுப்பது இடது கைக்குக் கூடத் தெரியாமல் இருப்பதே சிறந்த தானம். தானம் செய்யும் விடயத்தில் கர்ண்ணன் மாதிரி இருக்க வேண்டும்.

தன் மனைவிக்கு இறுதிக் கடன் செய்ய விறகு கேட்டு வந்த ஒரு ஏழைக்கு தன் அரண்மனையின் சந்தன மரத் தூணை பெயர்த்துக் கொடுத்தான் கர்ணன்.

ஒரு தடவை கிருஷ்ண பரமாத்மா மலை போல செல்வத்தைக் குவித்து இதை உடனே தானம் செய்யுங்கள் என்று அர்ஜுனனிடமும் கர்ணனிடமும் கூறினார்.

அர்ஜுனன் அதெப்படி இவ்வளவு பெரிய செல்வத்தைத் தானம் செய்ய முடியும் என்று கேட்டார். ஆனால் கர்ணன் "இந்தா கண்ணா இதை முழுவதும் உனக்கே தானமாகத் தருகிறேன்" என்றான்.

இதன்மூலம் நாம் தானம் செய்யும் அளவுக்கு நம்மை உயர்த்திய இறைவனுக்கு நன்றி செலுத்தி கணக்கு பார்க்காமல் தானம் செய்ய வேண்டும் என்ற தத்துவம் உள்ளதை அறியலாம்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## இதுவரை 83 யானைகள் உயிரிழப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 83 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரண இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

மின்சார தாக்கம், துப்பாக்கிச்சூடு மற்றும் இயற்கை காரணிகள் காரணமாகவே இந்த மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## நாடு முழுவதும் போதைப் பொருள் தடுப்பு சோதனைகள் முன்னெடுப்பு

(கொழும்பு)

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப்பிரிவு ஆகியவற்றினால் நேற்று முன்தினம் நாடு முழுவதும் 122 போதைப்பொருள் தடுப்பு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது வெல்லம்பிட்டிய பகுதியில் 29 கிராம் ஐஸ் போதைப்பொருடன் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 8 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் மீட்கப்பட்டுள்ளது.

கிராண்ட்பாஸ் பகுதியில் 15 கிராம் ஹெரோயினுடன் மேலும் ஒருவர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-4)

## தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய ஐவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்களை மீறி செயற்பட்ட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய கடந்த ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் மூவாயிரத்து 391 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை பண்டிகை காலங்களில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுவதன் ஊடாக கொரோனா ஆபத்தைத் தவிர்க்க முடியும் என சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 200 |
| தக்காளி | 70 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 120 | 100 |
| கரட் | 180 | 200 | 200 |
| பூசணி | 70 | 60 | 80 |
| புடோல் | 140 | 80 | 120 |
| வாழைக்காய் | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 200 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 110 | 100 | 150 |
| பயற்றங்காய் | 180 | 120 | 140 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 90 | 100 | 100 |
| கறிமிளகாய் | 180 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 800 |
| போஞ்சி | 160 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | 120 |
| கீரை - 1 பிடி | 50 | 30 | 50 |
| தேசிக்காய் | 150 | 100 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 50 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 240 |
| வெங்காயப்பூ | 160 | 140 | 200 |
| முள்ளங்கி | 50 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 |
| வல்லாரை | 80 | 20 | 30 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்களின் மூலம் விவசாயிகள் பயனடைய வேண்டும்

## யாழ்.அரச அதிபர்

(நல்லூர்)

**அரசாங்கத்தினால், விவசாய அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் மூலம் விவசாயிகள் பயன்பெற வேண்டும். அதேநேரத்தில் ஏற்கனவே இயங்கி தற்போது செயற்பாட்டில் இல்லாத சில விவசாய கூட்டுறவு சங்கங்களையும் அவற்றை ஏற்படுத்தி அந்தச் சங்கங்கள் ஊடாக பயன்கள் யாவும் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டும்.**

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற யாழ்.மாவட்ட விவசாயக் குழு கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கமநல அபிவிருத்தி திணைக்களம் மாகாண விவசாய திணைக்களம், மிருக வைத்திய திணைக்களம் ஊடாக யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் , மானியத் திட்டங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. விவசாய அமைச்சு அதற்குரிய நிதி ஒதுக்கீடுகளை வழங்கி வருகிறது.

குறிப்பாக கிராமத்திலே 75 சதவீதமான மக்கள் வசித்து வருகின்ற நிலையில் அவர்களுடைய மனைப் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு அரசாங்கத்தினுடைய கொள்கையின் அடிப்படையில் பல்வேறுபட்ட மானியத்திட்டங்கள் விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல வங்கிகளுக்கு ஊடாகவும் பல்வேறுபட்ட இலகு கடன்கள், வட்டி குறைந்த அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் விவசாயிகளுக்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அதனை தெளிவுபடுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த போகத்தில் பெரும் போகத்தின் போதும் விவசாயிகள் எதிர்கொண்ட நட்ட விபரங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

அதேநேரத்தில் அவர்களுக்குரிய தொழில்நுட்ப உதவிகள் மற்றும் கால்நடை உற்பத்தி திணைக்களத்தின் நடவடிக்கைகள் விவசாயிகளைச் சென்று சேர வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கை தொடர்பிலும் ஆராயப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் இன்று வரை தேசிய உர நிலைய அலுவலகம் ஒன்று இயங்காத நிலை காணப்பட்டது. மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்ட விவசாய அமைச்சரின் கோரிக்கைக்கிணங்க அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (5-4-33)

# இலங்கை போக்குவரத்து சபையில் 5 வருடங்களுக்கு மேலாக பணியாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனம்

## போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் 5 வருடங்களுக்கு அதிகமான அனுபவமுள்ள அனைத்து ஊழியர்களையும் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுப்பதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போக்குவரத்து அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அவர் இதனை குறிப்பிட்டார்.

இதேவேளை, நீண்டகாலமாக நிலவிவரும் சாரதி ஆலோசகர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்வரும் மேமாதத்தில் உரிய பரீட்சையை நடத்தி இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் வெற்றிடங்களுக்கு குறைந்த வருமான குடும்பங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் தகுதிவாய்ந்தவர்களை விரைவாக இணைத்துக்கொள்வதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

நவீன வாகனங்களில் காணப்படும் உயர் தொழிநுட்பம் வாய்ந்த உபகரணங்கள் தொடர்பில் அரச அலுவலகங்களில் பணியாற்றும் சாரதிகளுக்கு அறிவுறுத்தும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் யோசனை முன்வைத்தனர். இவ்வாறு உபகரணங்கள் தொடர்பில் சாரதிகளிடம் காணப்படும் போதிய அறிவின்மையால் நவீன வாகனங்களின் நிலைமை மிக விரைவாக சேதமடைவதாக உறுப்பினர்களின் கருத்தாக இருந்தது.

பயணிகள் போக்குவரத்து பேருந்து சாரதிகளுக்கு விசேட சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பில் அமைச்சு ஆராய்ந்து வருவதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (நி-4-8)

# உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேச தலையீட்டை அனுமதியோம்

## எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேசம் தலையிடுவதை ஐக்கிய மக்கள் சக்தி அனுமதிக்காது.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அதன் தற்போதைய வடிவத்தில் ஆதரிக்கத்தயார். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.



அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கை இலங்கையில் அனைத்து மக்களும் ஒருமித்த நாட்டில் ஐக்கியமாக வாழ்வதையே குறிப்பதாக தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் கவலைகளை அரசாங்கம் செவிமடுக்க வேண்டும். மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நியமிக்கப்பட்ட கற்றல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும்.

நாட்டில் தீவிரவாதத்தை ஊக்குவித்ததன் விளைவாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானத்தின் மீதான வாக்குகளை அரசாங்கம் இழந்தது. எனினும் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேசம் தலையிடுவதை ஐக்கிய மக்கள் சக்தி அனுமதிக்காது.

இலங்கையில் வெளிநாட்டு நீதிபதிகளை நியமிப்பதை நாம் எதிர்க்கின்றோம். எங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து ஆலோசனை தேவையில்லை என்று அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு பொறிமுறையின் மூலம் இலங்கை தனது சொந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். இருப்பினும் உள்நாட்டு பொறிமுறையானது சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும் என்று சஜித் வலியுறுத்தினார். (நி-4)



**சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் O/L பிரிவு மாணவர்களின் அனுசரணையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கல்விகற்கும் தேவையுள்ள 50 மாணவர்களுக்கான காலணிகள் வழங்கப்பட்டுள்ளன. இந் நிகழ்வு கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (படம்-விஜயவாசன்)**

# ஏல விற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட/ நீதிவான் நீதிமன்றத்தில் இன்று 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு நீதிமன்ற வளாகத் தில் மணல் ஏல விற்பனை நடைபெறவுள்ளது.

ஏல விற்பனைக்கான மண லினை ஏல விற்பனை ஆரம்ப மாவதற்கு அரை மணித்தியா லம் முன்பாக பதிவாளரின் அனுதியுடன் பார்வையிட முடியும் எனவும் ஏல விற்பனை யில் பங்கு பெறுவோர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமுகமளிக்க வேண்டுமெனவும் கிளிநொச்சி மாவட்ட் நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திருந்தே பார்க்கும் மர்மம் என்ன?
– கவிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இதோ! கொரோனா நடன அரங்கேற்றம்
## நட்டுவாங்கம் - தென்பகுதி
## பரத நாட்டியம் - வடபகுதி

பரத நாட்டியம் எமக்கு மிக அறிமுகமான கலை. ஆடவல்லானின் திருத்தாண்டவங்கள் பரதத்தினூடாக வெளிப்படுத்தப்படுகின்றன.

இதனால் பரத நாட்டியக் கலையைத் தமது பிள்ளைகளுக்குக் கற்பிப்பதில் நம் பெற்றோர்கள் அதிக விருப்பு உடையவர்களாக இருப்பதைக் காண முடியும்.

இங்கு பரதநாட்டியத்தின் அத்தனை அசைவுகளுக்கும் அடிநாதமாக இருப்பது நட்டுவாங்கம்.

**தாம்... தீம்... தோம்...** என்ற உச்சாடனம் பரத நாட்டியக் கலையை அதி உச்சத்துக்கு எடுத்துச் செல்லும்.

அதனால் நட்டுவாங்கக் கலைஞர் உணர்வு பூர்வமான கலைத்துவத்துடனும் அரங்கை உசார் நிலையில் வைத்திருக்கக்கூடிய மன எழுச்சியுடனும் இருக்க வேண்டும்.

தவிர, அரங்கில் மறைந்திருந்து நாட்டிய கலையை இயக்குகின்ற சக்தியாகவும் நட்டுவாங்கமே இருக்கிறது.

இஃது ஒரு சிறிய அறிமுகத்துக்கானது.

இவை ஒருபுறமிருக்க, வட பகுதியில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தொற்று மிக வேகமாக அதிகரித்து வருகிறது.

அதிலும் பாடசாலை மாணவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதெனும்போது, நிலைமை படுமோசமாக மாறிவருகிறது என்பதை ஊகிக்க முடியும்.

இருந்தும் வடபகுதியில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் – பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதில் வட மாகாண அரச நிர்வாகம் மிகப் பின்னடைவில் உள்ளதென்பதைக் கூறித்தானாக வேண்டும்.

இதற்குக் காரணம் என்ன என்ற கேள்வி எழவே செய்யும்.

இங்குதான் வடபகுதி அரச நிர்வாகத்தைப் பரத நாட்டியம் என எடுத்துக் கொண்டால், அதனை இயக்குகின்ற நட்டுவாங்கம் தென்பகுதியிலுள்ள மத்திய அரச நிர்வாகம் எனக் கூறிக் கொள்ளலாம்.

ஆக, தென்பகுதி நட்டுவாங்கம் தாம்... தீம்... தோம்... என்றால் மட்டுமே வட பகுதி பரதம் (நிர்வாகம்) ஆடல் புரிய முடியும்.

ஆம், யாழ்ப்பாணத்தில் எங்கும் கொரோனா பொசிற்றிவ் என்றிருக்கையில்,

அதனைக் கட்டுப்படுத்துகின்ற நடவடிக்கைகள் எதனையும் எடுக்க முடியாமல் திண்டாடுகின்ற வடக்கு மாகாண நிர்வாகம்; ஆடை அலங்காரங்கள் அணிந்தவாறு அரங்கில் நின்று அங்குமிங்கும் நடக்கிறது.

தாம்... தீம்... தோம்... என்ற தென்பகுதி நட்டுவாங்கத்தின் கட்டளைகளைப் பார்த்திருக்கிறது.

அந்தோ! வடபகுதி மக்கள் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகி அல்லல்படப் போகின்றனர். யார் என்ன செய்ய முடியும்.

பாட்டும் நானே! பாவமும் நானே! என்று துணிந்து களமிறங்க வல்லார் வடபகுதியில் யாருளரோ யாம் அறியோம் பராபரமே.

# பாராளுமன்ற அறிக்கைகள் மும்மொழியிலும் வழங்கப்படாது

## சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் அறிக்கைகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு விரும்பிய மொழியில் மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கான முறைமையொன்றை உருவாக்கியிருப்பதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று சபையில் அறிவிப்பொன்றை விடுத்துத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் வருடாந்த அறிக்கைகள், செயற்றிறன் அறிக்கைகள் மற்றும் ஏனைய அறிக்கைகளின் அச்சுப் பிரதிகளை மூன்று மொழிகளிலும் வழங்குவதால் ஒவ்வொரு அமைச்சுக்கும் பாரிய செலவு ஏற்படுவது தொடர்பில் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக்கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதற்கமைய ஏற்படும் அதிக செலவீனத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அந்த அறிக்கைகளை ஒவ்வொரு உறுப்பினரும் விரும்பும் மொழியில் மாத்திரம் பெற்றுக் கொடுப்பது பொருத்தமானது என இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய ஒவ்வொரு உறுப்பினரும் குறித்த அறிக்கைகளை பெற்றுக்கொள்ள விரும்பும் மொழி என்ன? என்பதை தனித்தனியாக அறிந்து கொள்வதற்கும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில், ஒப்புதல் பெறத் தயாரிக்கப்பட்ட கடிதத்தினூடாக அறிக்கைகளைப் பெற விரும்பும் மொழியை விரைவில் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்குமாறு சபாநாயகர் உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார். (நி-4)

# பகிடிவதையை இல்லாதொழிக்க பல்கலை உபவேந்தர்கள் கோரிக்கை

(கொழும்பு)

சட்டமூலமாக தயாரிக்கப்பட்டு வரும் புதிய கல்விக் கொள்கை தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அரசாங்க கணக்குகள் தொடர்பான தெரிவுக்குழு கல்விஅமைச்சுக்கு அறிவித்துள்ளது.

தேசிய அபிவிருத்தித் திட்டத்தில் கல்வி முறைமை அத்தியாவசியம் என்பதால், விரைவான அபிவிருத்திக்கு பாடசாலை கல்வி தொடர்பான தேசிய கொள்கையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பாராளுமன்ற தெரிவுக் குழு பரிந்துரைத்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் மே மாதத்திற்குள் குறித்த அறிக்கையை அரசாங்க கணக்குகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புதிய தேசிய கல்விக் கொள்கையை தயாரிக்கும்போது பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதையை இல்லாதொழிப்பது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் பல்கலைக்கழக உபவேந்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கலைப்பீட பட்டதாரிகளுக்கான தொழில்களை அதிகரிக்குமாறும் அரசாங்க கணக்குகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்-குழுவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்வதற்காக ஆங்கில மொழிக் கற்கையை மேலும்வலுப்பெறச் செய்ய வேண்டும் என அரசாங்க கணக்குகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு வலியுறுத்தியுள்ளது. (நி-4)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### எப்போதும்?

எப்படி எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பது? "எப்போதும்" என்பதை மறந்துவிடுங்கள்; பின்பு நீங்கள் மகிழ்ச்சியா இருப்பீர்கள்.

எப்போதும் சௌகரியமாக இருக்கவேண்டும் என்று விரும்பும் போது நீங்கள் சோம்பேறி ஆகிவிடுகிறீர்கள்.

எப்போதும் குற்றம் நீங்கிச் செம்மையாக இருக்கவேண்டும் என்று விரும்பும்போது நீங்கள் கோபமடைகிறீர்கள்.

எப்போதும் பணக்காரராக இருக்கவேண்டும் என்று விரும்பும்போது நீங்கள் பேராசைக்காரர் ஆகிவிடுகிறீர்கள்.

வாழ்க்கை என்பது மட்டுமே எப்போதும் இருக்கக்கூடியது என்பதை நீங்கள் உணரத் தவறும் போது பயம் வருகிறது. (தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** சிவப்பிரகாசம், நெல்லண்டை பருத்தித்துறை வீதி, வெளிச்சவீடு, கடற்படை முகாம் மாதனை, புனித நகர், கற்கோவளம்ஜஸ்தொழிற்சாலை, பருத்தித்துறைமூன்றாம் குறுக்குத்தெரு, ஜெயந்தா இண்டஸ்றி யல் பூங்கா கற்கோவளம், தொல்புரம், வடலியடைப்பு, சித்தன்கேணி, கள்ள வேம்படி, மாதகல் பிரதேசம், குசுமாந்துறை, ஜம்புகோளப் பட்டினம், காட்டுப்புலம், ஜம்புகோளப்பட்டினம் Rest House, காஞ்சிபுரம், சில்லாலை, சாந்தை, சில்லாலை முதியோர் இல்லம், காரைநகர் ஆலடி, வலந்தலை, மருதபுரம், வியாவில், கருங்காலி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

**தேங்காய் உடைப்பதன் தத்துவம்: ஆன்மாக்களுக்கு ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்கள் உண்டு. இந்த மூன்று மலங்களும் நீங்கினால் ஆன்மாவுக்கு ஆனந்தம் விளைகின்றது.**

**உடம்புக்கு மலச்சிக்கல் எல்லா நோய்களுக்கும் காரணம். அதுபோல் ஆன்மாவிடத்திலுள்ள மலம் நீங்க ஆன்மா இறைவனை வழிபடுதல் வேண்டும்.**

**(தொடரும்)**

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# நவக்கிரக தோசமா? இதோ பரிகாரம்

கறுப்பு ஏலக்காய் சிறிதளவு எடுத்துக்கொண்டு அதை நீரில் நன்கு கொதிக்கவைத்து பின் அதை குளிக்கும் நீரில் கலந்து குளித்துவருவதன் மூலம் வியாழனால் ஏற்படும் தோஷங்கள் விலகும்.

சுக்கிர தோஷம் நீங்க, பச்சை ஏலக்காயை சிறிதளவு எடுத்துக்கொண்டு அதை நீரில் நான்கு கொதிக்கவைத்து பின் அதை குளிக்கும் நீரில் கலந்து குளித்துவர வேண்டும்.

சனி தோஷம் நீங்க, கறுப்பு எள் சிறிதளவு எடுத்துக் கொண்டு அதை நீரில் நான்கு கொதிக்கவைத்து பின் அதை குளிக்கும் நீரில் கலந்து குளித்துவர வேண்டும்.

ராகு தோஷம் நீங்க, நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கக்கூடிய மகிஷாக்ஷியை சிறிதளவு எடுத்துக் கொண்டு அதை நீரில் நான்கு கொதிக்கவைத்து பின் அதை குளிக்கும் நீரில் கலந்து குளித்துவர வேண்டும்.

கேது தோஷம் நீங்க, அறுகம்புல்லை சிறிதளவு எடுத்துக்கொண்டு அதை நீரில் நான்கு கொதிக்கவைத்து பின் அ்தை குளிக்கும் நீரில் கலந்து குளித்து வர வேண்டும். (முற்றும்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# போர்வீரன் ஈக்கள் (Black Soldier Fly); ஓர் நிலையான எதிர்காலத்திற்கான கைத்தொழில் புரட்சி

நாம் வாழும் புவியில் அதிக பல்வகைமை கொண்ட இனங்களாக பூச்சியினங்கள் காணப்படுகின்றன. இவை பொதுவாக பீடைகளாக மனிதனுக்கு பொருளாதார ரீதியில் பாதிப்பை ஏற்படுத்துபவையாக இருப்பினும், சில இனங்கள் நன்மையளிக்கும் இனங்களாக மனிதனின் பொருளாதாரத்தை உச்ச வளர்ச்சிக்கு எடுத்துச் செல்வதாகவும் அமைகின்றன. உதாரணமாக பட்டுத் துணி உற்பத்தி, மகரந்தச் சேர்க்கையாளர்களின் விற்பனை, மருந்துகளின் உற்பத்தி, மனிதன் மற்றும்கால்நடைகளுக்கான உணவு உற்பத்தி, உயிரியல் பீடைக் கட்டுப்பாடு, விஞ்ஞான மற்றும் தடயவியல் ஆராய்ச்சி போன்ற பல்வேறுபட்ட துறைகளில் பூச்சியினங்கள் நன்மை பயக்கின்றன. மேலும் இதனை விட சூழல் பாதுகாப்பிலும் நிலவுகையிலும் இவற்றின் பங்களிப்பினை எண்ணளவில் குறிப்பிட முடியாது.

பூச்சியியல் [Entomology] என்பது பூச்சிகள் பற்றிய தெளிவான ஓர் விஞ்ஞானக் கற்கையாகும். இதனை நன்கு உணர்ந்த மேலை நாட்டவர்கள் பூச்சிகளை எவ்வாறு கைத்தொழில் உற்பத்தியில் பயன்படுத்தலாம் என்பதை ஆராய்ந்து இவ்விடயத்தில் பெருமளவு வெற்றியும் கண்டு வருகின்றனர். கிராமப்புற சிறிய தேனீ வளர்ப்புகளில் ஆரம்பித்து இன்றைய நாட்களில் வியக்க வைக்கும் அளவிற்கு பாரிய தொழிற்சாலைகளில் தேனீக்களைப் பயன்படுத்தி தேன் உற்பத்தி நடைபெறுகிறது. இவ்வாறே அனைத்து பூச்சியின உற்பத்திகளும் எமது எண்ணங்களுக்கு அப்பாற்பட்ட நிலையை அடைந்துவிட்டன.



எமது நாட்டைப் பொறுத்த வரையில், "சுய கைத்தொழில்" என்ற விடயத்தில் அதிகம் கவனம் செலுத்த வேண்டிய கடப்பாடு இருக்கிறது. பல்கலை சென்று பட்டம் பெற்ற மாணவர்களுக்கே வேலை வாய்ப்பு கிடைப்பதென்பது கேள்விக் குறியாகவே காணப்படுகிறது. அது மட்டுமல்லாமல் எமது ஜனாதிபதியின் கொள்கைகளில் ஒன்றான "உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்தல்" என்ற எண்ணக்கரு பாராட்டத்தக்கதொன்றாகும். ஆகவே நாம் மாற்று வழிகளில் பணத்தை ஈட்டிக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது. இதற்கான ஓர் வழியையே இவ் விஞ்ஞானக் கட்டுரை வாயிலாக உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன்.


போர்வீரன் ஈக்கள் (Black Soldier Fly) விஞ்ஞானப் பெயர் -[Hermetia illucens] ஈக்கள் குடும்பத்தைச் சார்ந்த பூச்சியினமாகும். இவற்றின் குடம்பிப் பருவங்கள் சூழலின் நிலவுகையை உறுதிப்படுத்துவதுடன் பல்வேறுபட்ட வகையில் மனிதனின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் துணை நிற்கின்றன. மேலை நாடுகளில் இவற்றினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் பாரிய வளர்ச்சி கண்டுள்ளன.

போர்வீரன் ஈக்களின் குடம்பிப் பருவங்கள் (Black Soldier Fly Larvae; BSFL) சேதனக் கழிவுகளை உரமாக மாற்றுவதற்கான மகத்தான ஆற்றலைக் கொண்டுள்ளன, அத்துடன் கால்நடைகளின் உணவு உற்பத்தி [pet food], வீதி யோர உணவுகளின் உற்பத்தி [street food], கைற்றின் உற்பத்தி, எணணெய் உற்பத்தி, சேதன பசளைகளின் உருவாக்கம் [organic compost] மற்றும் உயிரியல் பரிகரிப்பு [bio remediation] போன்ற பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

போர்வீரன் ஈ வளர்ப்பை நோக்கமாகக் கொண்ட உற்பத்தியாளர்கள் முதலில் இப்பூச்சியினத்தின் உயிரியலை நன்கு விளங்கியிருத்தல் வேண்டும். அதாவது அவற்றின் வாழ்க்கைவட்டம், வாழ்விடம்/ வளர்ப்பூடகம், போசணைத் தேவைகள், சூழலியல் தேவைகள் (வெப்பநிலை, ஒளி, ஈரப்பதன்) மற்றும் அறுவடை பற்றிய விடயங்களைத் தெரிந்திருத்தல் அவசியமானது.

வாழ்க்கை வட்டம்

போர்வீரன் ஈக்கள் தமது வாழ்க்கைக் காலத்தில் நிறையுரு மாற்றத்தைக் [holometabolous] காண்பிக்கின்றன. நிறையுடலி ஈ பொதுவாக கறுப்பு நிறம் கொண்ட பார்ப்பதற்கு குளவி போன்று தோற்றத்தைக் கொண்டிருக்கும். மேலும்




BSF - வாழ்க்கை வட்டம்

இவற்றின் நெஞ்சறைப்பகுதி [thorax] உலோக மினுமினுப்பைக் கொண்ட பச்சை நிறத்தினையும், வயிற்றறைப் பகுதியின் இறுதியில் சிவப்பு நிறத்தினையும் கொண்டிருக்கும். நிறையுடலி பெண் ஈ ஏறத்தாழ 200-640 வரையான முட்டைகளை ஒரே தடவையில் அழுகின்ற/ உக்குகின்ற மேற்பரப்பில் இடுகின்றன.

ஏறத்தாழ நான்கு நாட்களின் பின் முட்டையிலிருந்து முதலாவது நிலைக் குடம்பிகள் [first instar larvae] வெளிவருகின்றன. இவை மங்கிய வெள்ளை நிறத்தை உடையவை. மேலும் இவை இறுதி நிலை அடைகையில் 29mm நீளத்தையும் 6mm அகலத்தையும் 220mg வரையிலான நிறையையும் உடையதாகக் காணப்படும். இக்குடம்பிகள் மிகவும் விரைவாக உண்ணும் தகைமை கொண்டவையாகக் காணப்படுவதுடன் உக்குகின்ற சேதன பதார்த்தங்களான அழுகலடைந்த பழங்கள் மற்றும் மரக்கறிகள், தானியங்களின் கோதுகள், அரிக்கப்பட்ட தானியங்கள், சமையல் கழிவுகள், விலங்குகளின் கழிவுகள், பழுதடைந்த உணவுகள் போன்றவற்றை பிரிகையாக்கம் செய்து போசணையை பெற்றுக்கொள்கின்றன.

வளர்ச்சியடைந்த போர்வீரன் குடம்பி ஒன்று ஏறத்தாழ நாளொன்றிற்கு 25 - 500mg அளவுடைய சேதனப் பதார்த்தத்தை உட்கொண்டு அவற்றைத் தரமான புரதங்கள், கொழுப்புகள் மற்றும் கனியுப்புக்கள் நிறைந்த உடற்றிணிவாக மாற்றுகிறது.

குடம்பியானது போதியளவு உணவு கிடைக்குமிடத்து அண்ணளவாக இரண்டு மாதங்களில் இறுதிப் பருவத்தை அடைந்துவிடும். உணவு பற்றாக்குறை காணப்படின் இக்கால அளவு நான்கு மாதங்களாக அதிகரிக்கலாம். இவை குடம்பிப் பருவத்தின் இறுதிக் கட்டம் அதாவது கூட்டுப்புழுவிற்கு முன்னான பருவத்தை [prepupal stage] அடையும் போது உணவு உட்கொள்வதை நிறுத்தி சமிபாட்டுத் தொகுதியை வெறுமையாக்கிக் கொள்ளும்.

மேலும் இவை தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் வாழ்க்கை வட்டத்தின் இறுதி நிலையை அதாவது நிறையுடலிப் பருவத்தை [adult] அடைவதற்காகவும் உலர்ந்த பகுதியை நோக்கி இடம்பெயரும். கூட்டுப்புழுவானது ஏறத்தாழ பதினான்கு நாட்களில் நிறையுடலியாக மாறிவிடும். எனினும் இக்கால அளவு ஐந்து மாதங்கள் வரை வேறுபடலாம். நிறையுடலி உருவாக்கத்தின் இருநாட்களுக்குப் பின்னர் பெண் ஈயானது இனப்பெருக்கச் செயற்பாட்டில் இணைந்து குடம்பிகளுக்கு உணவு கிடைக்க கூடியதாகவுள்ள பிரதேசங்களில் முட்டைகளை இடுகின்றன. நிறையுடலிப் பருவ ஈக்கள் ஏறத்தாழ 47-73 நாட்கள் உயிர் வாழக்கூடியன.

இவை இயற்கையில் பூக்களில் இருந்து தேனை உணவாக உட்கொள்கின்றன. இவற்றை பண்ணைகளில் வளர்ப்புச் செய்யும் போது இனிப்புச் சுவை நிறைந்த திரவத்தை உணவாக வழங்க வேண்டும்.

எனினும் சில நாட்க ளுக்கு [8 -10 நாட்கள்] நீருடன் மாத்திரம் காலத்தைக் கழிக்கக் கூடியன. காரணம் முன்பு குடம்பிகளில் சேமிக்கப்பட்ட கொழுப்புகளிலிருந்து போசணையைப் பெற்றுக் கொள்ளும். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி...

கிருஷ்ணபுரம் கோவிட் - 19 சிகிச்சை நிலையத்தில் கண்காணிக்கப்படுகின்றனர் என்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை தெரிவித்துள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாநகர முதல்வர், சட்டத்தரணி வி.மணிவண்ணனுடன் தொடர்புடையவர்கள் குடும்பத்துடன் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், யாழ்ப்பாணம் நீதிமன்ற உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகளிடம் அடுத்த வாரம் பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-3,33)

## ஏப்ரல் 9...

ஆண்டின் முதலாம் தவணை பாடசாலை விடுமுறை விடப்படும் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 9ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் ஏப்ரல் 19 ஆம் திகதி 2ஆம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும் எனவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ம-3)

## 54 இந்திய...

ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் இந்தியா நடுநிலைமை வகித்ததன் எதிரொலியே இக்கைது நடவடிக்கை என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு கடற்பரப்புகளில் அத்துமீறி நுழைந்ததாக தெரிவித்து 5 படகுகளுடன் 54 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் இவ்வாறு கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தொடர்பில் மனிதாபிமான நடவடிக்கை அவசியமென தெரிவித்து இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிக்கையொன்றை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அந்த அறிக்கையில்,

இலங்கை கடற்படையால் நேற்றைய தினம்இரவு 5 படகுகளுடன் 54 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டதாக உயர் ஸ்தானிகராலயத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் தீர்க்கப்பட வேண்டியது அவசியமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-3,33,100,104,316,350)

## நாட்டில் மேலும்...

இலங்கை சுகாதார அமைச்சு இந்த தகவலை தெரிவித்துள்ளது.

இதன்மூலம் இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 557ஆக அதிகரித்துள்ளது.(ம-3)

## யாழில் ஒரே...

உள்ளமை நேற்று புதன்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் 66 பேர் யாழ்ப்பாணம் மாநகர மத்தி நவீன சந்தைப் பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 677 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 80 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 77 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் 11 பேர் ஏற்கெனவே தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள்.

யாழ்ப்பாணம் மாநகரில் நவீன சந்தை உள்ளிட்ட கடைத் தொகுதிகளில் பணியாற்றும் 66 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் கொரோனா அறிகுறிகளுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்" என்றும் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33)

## சர்வதேச நாடு...

வும் கோரப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், இது குறித்து நேற்று (வியாழக்கிழமை) கருத்து வெளியிட்டுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகம், இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகவல், பொறுப்புக்கூறல் மற்றும் நீதி ஆகியவற்றைப் பெற உதவும் வெற்றியாகும் என தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தீர்மானத்தைக் கொண்டு வருவதற்காக பிரசாரம் செய்த செயற்பாட்டாளர்களுக்கு எதிரான எந்தவொரு பழிவாங்கலும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என ஐ.நா. மற்றும் உறுப்பு நாடுகள் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வலியுறுத்த வேண்டும் என அந்த கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (ம-3)

## யாழில் வீரியத்...

கூடிய கொரோனா தடுப்பு செயலணி குறித்த தீர்மானத்தினை அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரின் வேம்படிச் சந்தியில் இருந்து மின்சார நிலையம் அமைந்துள்ள பகுதியும் மின்சார நிலைய வீதியில் கே.கே.எஸ்.வீதியிலிருந்து வைத்தியசாலை வரையும் மூடப்படும். கே.கே.எஸ் வீதி சத்திரச்சந்தியிலிருந்து முட்டாஸ் கடைச் சந்தி வரையும் மூடப்படும்.

யாழ்ப்பாணம் மாநகரில் பாடசாலைகளில் தொற்று அடையாளம் காணப்பட்ட மாணவர்கள் பயிலும் வகுப்புகள் மட்டும் 10 நாட்களுக்கு இடைநிறுத்தப்படுகிறது.

மேலும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மண்டபங்களில் திருமண நிகழ்வுகள், ஏனைய நிகழ்வுகள், கூட்டங்கள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்படுகின்றன. வீடுகளில் சுகாதார மருத்துவ அதிகாரியின் அனுமதியுடன் வீடுகளில் நடத்த அனுமதிக்கப்படும்.

உயிரிழந்தோரின் இறுதிக் கிரியைகளுக்கு 25 பேர் மாத்திரம் அனுமதிக்கப்படுவர்.

யாழ்ப்பாணம் மாநகரில் மக்களின் தேவையற்ற நடமாட்டத்துக்கு தடை விதிக்கப்படுகிறது.

அத்துடன், யாழ்ப்பாணம் மாநகரின் மத்திய பகுதி முடக்கப்பட்டு பேருந்து நிலையங்கள் கோட்டைப் பகுதிக்கு மாற்றப்படுவதுடன், வர்த்தக நிலையங்களும் மூடப்படு கின்றன. (ம-3,18,33,101)

## வட...

உள்ள அதிகாரிகள் தொடக்கம் பிரதேச சபைத் தவிசாளர்கள் வரையில் பெருமளவானவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர், உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், தவிசாளர்கள், யாழ். மாநகர ஆணையாளர் உட்பட்ட வடக்கின் உயர் அதிகாரிகள் வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த வடக்கு மாகாண நிர்வாக சேவைக்கு உட்பட்ட அதிகாரிகள் எனப் பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-3)

## ஐ.நா தீர்மானம்...

பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் சட்டவிரோதமானது என்று இலங்கை அரசாங்கம் நேற்று பாராளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த தீர்மானம் இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடும் முயற்சி என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன குற்றம் சுமத்தியுள்ளார். (ம-3)

## எதிர்வரும்...

என அரச உயர்மட்ட வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர், அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கும் உரிய வகையில் நிறைவேறிய பின்னர் ஓகஸ்ட் மாதமளவில் தேர்தலை நடத்துவதே அரசின் எதிர்ப்பார்ப்பாக இருக்கின்றது. (ம-3)

## புதிய கொரோனா...

சாலை மாணவர்களுக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்தில் கட்டுக் கடங்காமல் கொரோனா வேகமாக பரவி வரும் நிலையில் யாழ்ப்பாணத்தை முடக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. (ம-3)

## காவலாளி...

கலாசாலை வீதிப்பகுதியைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான சூசைப்பிள்ளை பிரதீப் (வயது-59) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)



































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு தயாரிப்பாளர் தேவை

மீசாலை, கொடிகாமத்தில் உள்ள உணவகத்திற்கு கொத்து ரொட்டி,பிறைட்ரைஸ் மற்றும் ஏனைய உணவுகள் சிறந்த முறையில் தயாரிக்கக்கூடிய,தங்கி நின்று பணிபுரியக்கூடிய ஆண் சமையலாளர் தேவை. (C-1809)

( சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். )

☎-077 872 2479

# D.C.M$_N$- யாழ். நகர்

(யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகாமை)

**A/L 2023** கலை, வர்த்தக வகுப்புக்கள்

28.03.2021 ஞாயிற்றுக்கிழமை

காலை 8.00 மணி

**வர்த்தகப் பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்**

- பொருளியல் — S. ஜெயக்குமார்
- கணக்கீடு — S. தவா
- வணிகக் கல்வி — N.S. கபில்

(6330)

**கலைப் பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்**

- தமிழ் - வழமையான முன்னணி ஆசிரியர்
- புவியியல் — P.S.V. தினேஸ்
- இந்துநாகரிகம் — T. ஞீஸ்
- அரசியல் — பொன் சந்துரு
- வரலாறு — S.S.Y. பிரதீபன்
- அளவையியல் — T.T. நீதன்
- ஊடகக் கல்வி — N. தீபன்
- ICT — லவேந்திரன்
- நாடகமும் அரங்கியலும் — M. ஜங்கரன்
- கிறிஸ்தவ நாகரிகம் — J.J. வசந்தன்
- விவசாய விஞ்ஞானம் — B. பாலசுதன்

D.C.M$_N$- நிர்வாகி 077 011 9434

# வரலாறு

## பாடம் கற்பிக்கப்படும்

6இல் இருந்து O/L, A/L வரையான வகுப்புகளுக்கு வரலாறு பாடம் குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும். (6329)

இடம்: யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார்

☎ 077 744 4794
076 057 6368

# ஹோட்டல் வேலை வாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்திருக்கும் பிரபல்யமான ஹோட்டல் ஒன்றுக்கு வரவேற்பாளர் ( ஆண்/பெண் ) தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு 27 / 28.032021 ஆம் திகதிகளில் முற்பகல் 10.00 மணிக்கு வல்வெட்டித்துறை, மடத்தடி ஊறிக்கட்டு எனும் இடத்தில் நடைபெறவுள்ளது.

இத்தேர்விற்கு சமுகமளிக்கும் பரீட்சார்த்திகள் தங்களுடைய கற்றல்தகைமைகளுக்கான ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு : இத்தேர்வில் HOTEL MANAGEMENT கற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (6338)

076 830 3931

# கல்யாண மாலை

[சர்வதேச திருமண சேவை]

T.P: 021 720 1005



இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com

பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே

# அறிவித்தல்

நாளை 27.03.2021 சனிக்கிழமை நடைபெற இருந்த IELTS மற்றும் Visa தொடர்பான கருத்தரங்கு யாழ். மாவட்டத்தில் நடைமுறை படுத்தப்பட்ட கோவிட் - 19 விதிமுறைகள் காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. (C-1816)

CAN LANKA IMMIGRATION SERVICE

# உடனடி வேலை வாய்ப்பு



V2 TRAVELS

விரைவு பொதிகள் சேவை (C-1807)

**வாடிக்கையாளர் சேவை அலுவலர்**

எமது அனைத்து கிளைகளிலும் வேலை செய்யக்கூடியவராகவும் அதிக நேரம் வேலை செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்

வயது :-35 வயதிற்குட்பட்டோர் (ஆண்கள் மட்டும்)

சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்

சம்பளம் - 25'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777068777

v2vacancies@gmail.com

# மரண அறிவித்தல்



பிறப்பு 09 . 07 . 1950

இறப்பு 25 . 03 . 2021

திருமதி

## ஸ்கொலஸ்ரிக்கா சேவியர்

கரம்பொன்னை பிறப்பிடமாகவும் இல. 42/1, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்கொலஸ்ரிக்கா சேவியர் நேற்று (25.03.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - பிலிப்ஆச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலம்சென்ற சேவியரின் அன்பு மனைவியும் அனிற்றா சுபாசினியின் (மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர், மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்கள தலைமைக் காரியாலயம் - பத்தரமுல்ல, கொழும்பு) பாசமிகு தாயாரும் ஞானதேவாவின் (Consul General of Sri Lanka, Sri Lanka Consulate, Karachi, Pakistan) பாசமிகு மாமியும் காலஞ்சென்ற சில்வேஸ்ரன் மற்றும் கலாமரியாம்பிள்ளை (இளைப்பாறிய மக்கள்வங்கி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஞானபேர்ஜிற்றா, ஞானஇன்பன்ற்ராஜ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (27.03.2021) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதன் பின்னர் புனித கொன்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(6340)

தகவல்:-
மகள்

# வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் பனிவீதியை முன்பக்கமாக கொண்ட மாடிக் கட்டடம் ஒன்றில் தளபாடமிடப்பட்ட 1 அறை மற்றும் 2 அறைகள், ஹோல், கிச்சனுடன் கூடிய வீடுகள் மற்றும் தளபாடமிடப்பட்ட அறைகள் வாடகைக்கு. (6343)

☎-077 105 6694

# வேலையாள் தேவை

யாழ். திருநெல்வேலியிலுள்ள எமது கட்டடத்திற்கு வயரிங், பிளம்பிங் வேலை தெரிந்தவர்கள் தேவை.

தொடர்பு (6343)

075 099 9243

# காணி விற்பனைக்கு

அரியாலை பொன்னம்பலம் சந்திக்கு அண்மையாகவுள்ள A9 வீதியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் 2 பரப்பு காணி விற்பனைக்கு.

(தரகர் தேவையில்லை.) (6343)

076 806 3757

# வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் புதிதாக திறக்கப்படவுள்ள Hotel இற்கு

- சமையலாளர்கள் (Cooks)
- சமையல் உதவியாளர்கள்

தேவை. (6341)

077 366 0917
077 210 5286

# அன்னா EXPRESS

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= (C-1768)

070 3305500
077 888 9388

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை, ஆவரங்கால், நெல்லியடி, சங்கத்தானை | பளை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லை | மல்லாவி, மன்னார், வவுனியா, கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

# பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
BARATHY - சித்தன்கேணி

எமது மூன்று நிறுவனங்களிலும்

**A/L 2023**

கலை - வர்த்தகம்

நாளை மறுதினம் ஆரம்பம்

28.03.2021

(ஞாயிற்றுக்கிழமை)

யாழ். நகர் - 8.00 a.m
சுன்னாகம் - 2.00 p.m
சித்தன்கேணி - 10.00 a.m

அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும். (C-1811)

மேலதிக விபரங்களிற்கு

077 376 3511

# AMC ACADAMY

யாழ். நகர் - கல்வியங்காடு

A/L 2023 புதிய பிரிவு ஆரம்பம்
சனி 27.03.2021 காலை 9.00 மணி

A/L 2021 துரித மீட்டல்
இரவு நேர வகுப்புக்கள் ஆரம்பம்
வெள்ளி 7.00 pm

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

- கணக்கீடு - A. கலைச்செல்வன்
- பொருளியல் - M. விஜிதன்
- வணிகக்கல்வி - B. கோபிதன்

(6342)

077 694 4543

# விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜேர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- புத்தூர்
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- மானிப்பாய்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி

(C-1767)

0768226240 DHL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.